# திருமலைத்தீபம்
Thirumalaitheepam

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் 38
விலை 20/=

தீபம்-38
மார்ச், ஏப்ரல் இதழ்-2017 ,ஆரம்பம் 15 மாசி-2013.



திருமறைக்கல்வி நடுநிலையம்,
இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 2221022, 026 3202532


**ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே (தி.பா 118 : 24 )**



## ஆயரின் செய்தி

கிறிஸ்துவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே,

உங்கள் அனைவருக்கும் உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு அனைவர் வாழ்விலும் ஆசீரையும் புதுவாழ்வையும் கொண்டுவர செபிக்கிறேன்.

தவக்காலம் தொடங்கியதிலிருந்து நாம் பல செப, தப முயற்சிகளில் ஈடுபட்டிருந்தோம். திருச்சபை எமக்குத் தந்த பெரும் கொடையாக தவக்காலம் அமைந்துள்ளது. இது அருளின் காலம், ஒப்புரவின் காலம், புதுவாழ்வின் காலம். வழமை போல இத் தவக்காலத்தில் நாம் தனித்தும், குடும்பமாகவும், பங்குச் சமூகமாகவும், மறைமாவட்ட திருச்சபையாகவும் பல ஆன்மீக செயல்களில் ஈடுபட்டிருந்தோம். தவக்கால செபவழிபாடு ஆண்டவரோடு 12 மணிநேர நற்கருணை ஆராதனை, குருக்களுக்கான வருடாந்த ஞானஒடுக்கம், நாச்சிக்குடாவில் தவக்கால சிலுவைப்பாதை (01 ஏப்ரல்) குழுக்களாக சிலுவைப் பாதை, யாத்திரை ஸ்தலங்களுக்குச் சென்று தியானித்தது, **'நிமிர்ந்துபாராயோ'** திருப்பாடுகளின் காட்சி (02 ஏப்ரல்), என பல சந்தர்ப்பங்கள் அமைந்திருந்தன. இவற்றினூடாக எம்மை மனமாற்றத்தில் வழிநடத்தும் இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

ஆண்டவரோடு 12 மணிநேர ஆராதனை மார்ச் 24ம் திகதி மாலை 06 மணிக்கு அனைத்து ஆலயங்களிலும் நடைபெற்றது. அதேபோல் ஏப்ரல் 08ம் திகதி பாலையூற்றுப் பங்கில் நடைபெற்றது. அமைதியான முறையில் நடைபெறும் இந்த நற்கருணை ஆராதனையை ஒழுங்குசெய்த குருக்களுக்கும் பங்கு சமூகத்திற்கும் எனது பராட்டுக்கள்.

ஏப்ரல் 1ம் திகதி நாச்சிக்குடாவில் மறைமாவட்ட ரீதியில் திருச்சிலுவைப் பாதைத் தியானம் நடைபெற்று திருப்பலியோடு நிறைவடைந்தது. இதற்குப் பெருமளவு ஆயத்தங்களை சிறப்பாகசெய்து முடித்த சீனன்குடாப் பங்குத்தந்தை அருட்பணி ஜோர்ஜ் திசநாயக்காவையும் பங்கு மக்களையும் ஏனைய பங்களிப்பைச் செய்த அனைத்து குருக்களையும் நான் பெரிதும் பராட்டுகின்றேன். ஒவ்வொரு வருடமும் நாம் பலமீளாய்வு செய்து திருவழிபாட்டையும் ஏனைய ஒழுங்குகளையும் தரமுள்ளதாக்கிக் கொண்டு வருகின்றோம். குருக்களுக்கும், பங்குமக்களுக்கும், நன்கொடையாளர்களுக்கும் எனது நன்றியும் பாராட்டும்.

**'நிமிர்ந்துபாராயோ'** எனும் திருப்பாடுகளின் காட்சி மீண்டும் மேடையேற்றப்பட்டது. தமது தனிப்பட்ட நேரம், டெங்குக் காய்ச்சல் தொற்றும் பயம் போன்ற பல சவால்களையும் தாண்டி கலைஞர்கள் பல பங்குகளிலுமிருந்து வந்து தமது பங்களிப்பைச் செய்திருந்தார்கள். ஒவ்வொருவரையும் நான் வாழ்த்துகின்றேன், பாராட்டுகின்றேன். ஆண்டவர் உங்கள் அர்ப்பணிப்பை என்றும் ஆசீர்வதிப்பார். மேடைக்குப் பின்னணியில் இருந்து உழைத்த உள்ளங்களையும் நான் பாராட்டுகின்றேன். இரண்டரை மணிநேர திருப்பாடுகளின் காட்சியை ஒழுங்கு செய்து நெறிப்படுத்துவதென்பது இலகுவான விடயமல்ல.


தொடர்ச்சி 4ம் பக்கம்.......


## இயேசுவோடு 24 மணி நேரம்

### விசேட நற்கருணை ஆராதனை

இடம் : தூய திருமுழுக்கு யோவான் ஆலயம். (சாம்பல் தீவு)

காலம் : 13 மே 2017 (சனிக்கிழமை)
(வெள்ளி, சனி கிழமைகளில்)

நேரம் : பிற்பகல் 12 மணிமுதல் இரவு 12 மணி வரை



திருகோணமலை மறைமாவட்டத் திருச்சபையாக செபத்தில் இணைந்திடுவோம்.

## மறைமாவட்ட சிலுவைப்பாதை நாச்சிக்குடா

தவக்காலத்தின் பக்திமுயற்சிகளின் ஒன்றான எமது மறை மாவட்டத்தால் ஒழுங்கு செய்யப்பட் சிலுவைப் பாதையானது 01.04.2017 அன்று எல்லாப்பங்கு மக்களும் ஒன்று சேர நாச்சிக்குடாவில் அமைந்துள்ள கல்வாரித் திருத்தலத்தில் நடைபெற்றது. இவ் சிலுவைப்பதையினைத் தொடர்ந்து திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இப் பக்தி முயற்சியில் கலந்து கொண்ட குருக்கள், துறவிகள், பங்கு மக்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

அத்துடன் இப்பக்தி முயற்சியானது நல்ல முறையில் நடைபெறுவதற்கு உதவி புரிந்த அருட்தந்தையர்கள், பங்களிப்புச் செய்த அனைவருக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும்.






## சமாதானத்தை முன்னிட்டு இருதயபுர மக்களும், மங்களஎலிய கிராம மக்களுக்கும் இடையிலான நல்லிணக்க உறவுப்பாலம்
















தொடர்ச்சி 4ம் பக்கம்.....


**ஆண்டவரது பேரன்பால் பூவுலகு நிறைந்துள்ளது (தி.பா 33:6)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களோடு பேசுகிறேன்..

அருட்பணி N.C அருள்வரதன்

பங்குனி, சித்திரைகளை உள்ளடக்கிய தொடரிலே மீண்டும் உங்களோடு பேசுவதற்கு ஒரு வாய்ப்பு பெருமகிழ்வே. பங்குனி ஒன்று விபூதிப்புதன். மனம் திரும்பி நற்செய்தியை நம்ப அழைக்கும் இயேசுவின் வார்த்தையோடு தவக்காலம் தொடங்கிவிட்டது. இம்மாதத்திலே தூய மரியாவின் கணவர் தூய சூசையப்பரின் விழாவையும் கிறிஸ்து யேசுவின் பிறப்பின் அறிவிப்பையும் பெருவிழாக்களாக கொண்டாடினோம்.

மேலும் இம்மாதத்திலே அனைத்துப் பங்குகளிலும் 12 மணி ஆராதனை இடம் பெற்றது. இதே நாளில் இன்னுமொரு துன்பகரமான சம்பவம் நடந்து விட்டது. பேராலயப் பங்கு தந்தை ஜீட்ஜோன்சன் அடிகளாரின் குடும்பத்திலே சகோதரியார் அவரது கணவர், மகள் விபத்திலே இறந்து விட்டார்கள். மகள் எங்கள் மறை ஆசிரியை தாங்க முடியாத இவ்விழப்பிற்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபம்.

இம்மாதம் 14ம் திகதி அருட்பணி ஜோஜ் திசாநாயக்கா தமது குருத்துவ நாளைக் கொண்டாடினார்கள். ஆசீருடன் கூடிய எமது வாழ்த்துக்கள். மேலும் முடிந்த இம்மாதத்திலே மறைமாவட்டத்திலே பணியாற்றி மறைந்த அருட்பணியாளரகள், சீராளன் ஞான பண்டிதன், அல்போன்ஸ் தியாகராஜா, சிறீதரன் சில்வஸ்ரர், ஹென்றி அலோசியஸ் செலர் இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டி நிற்போம்.

சித்திரையை நோக்கும் போது இம்மாதம் முதலாம் திகதி சீனக்குடா, நாச்சிக்குடாவில் மறை மாவட்ட சிலுவைப் பாதை நடைபெற்றது.

மேலும் இம்மாதம் 9ம் திகதி திருப்பாடுகளின் குருத்து ஞாயிறும் புனித வாரமும் தொடங்குகின்றது. இதில் சிறப்பாக ஆண்டவரின் திருப்பாடுகளின் நிகழ்வு பாஸ்காத்திருவிழிப்பும் ஆண்டவரின் உயிர்ப்பு விழாவோடு காலம் நிறைவுறுகின்றது. இறை வார்த்தைகளை மனங்களில் நிலை நிறுத்தி காலத்தைப் பொன் செய்வோம். இவ்வேளையில் உயிர்ப்பின் வாழ்த்துக்களையும் கூறுகின்றோம்.

இம்மாதம் 23ம் திகதி அலஸ்தோட்டம் இறை இரக்கத் திருத்தலத்தினர் தங்கள் திருவிழாவைக் கொண்டாடுகின்றனர். பங்குத் தந்தைக்கும் மக்களுக்கும் எமது வாழ்த்துக்கள்.

இம் மாதத்திலே குருத்துவ நாளைக் கொண்டாடும் அருட்பணியாளர்களான அன்ரனி ஆரோக்கியசாமி செபஸ்தியான் (OF.M), றொய்சன், ஜோசப் ராஜ் கிளேயா OM.I, V. யோகேஸ்வரன், S.J. ஆஞ்சலோ பொன்னையா S T , T. கிங்ஸ்லி றொபட் இவர்களின் பணிகள் சிறக்க வேண்டுகின்றோம்.

அருட்பணி ஜோண் வெபர், B. A ஜோசப் ஆயர் இக்னேசியஸ் கிளனி இவர்கள் பணியாற்றி மறைந்தவர்கள். இவர்களை நினைவிற் கொண்டு இவர்கள் ஆற்றிய பணிகளுக்கு இறைவனுக்கு நன்றி கூறுவதோடு இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டுவோம்.
இம்மாதம் 13, 14 தமிழ் சிங்களப் புதுவருடமாகும். அனைத்து சகோதரங்களுக்கும் எமது நிறைந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.
சித்திரை ஒன்று முட்டாள்கள் தினம் ~ நடைமுறை அரசியலை நோக்கும் போது எல்லோரையும் முட்டாள்களாக்கும் நிலைகளிலே நகர்வுகள் சென்று கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. மக்களின் அமைதி நீதியோடு கூடிய வழிமுறைகள் இவைகளை மையப்படுத்திய நிலைகளே அனைவரின் எதிர்பார்ப்பாகும். இந்நிலைகள் நாட்டிலே நிலை கொள்ள இறைவனை வேண்டுவதோடு மீண்டும் உங்களோடு பேசுவேன் எனக் கூறி நிற்கின்றேன்.

## கன்னத்தில் குழி விழுவதில் என்ன அழகு...

ஒரு திருமண நிகழ்வு கோவிலில் முடிந்து சுபமங்களா திருமண மண்டத்தில் விருந்திற்குச் சென்ற அன்னம்மாக்கா சாப்பாட்டை முடித்து விட்டு ஐஸ்கிறீம் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

அந்நேரம் பக்கத்து வீட்டு அம்புஜமும் விருந்தின் பின் சாப்பிட்ட களைப்பில் கதிரையில் அமர்ந்தாள். அதுவும் அன்னம்மாவிற்கு அருகில் இருந்த கதிரையில் அமர்ந்தாள். அப்போது அம்புஜத்தின் மருமகள் வந்து அம்புஜம் அக்காவிடம் இந்தாங்கோ மாமி ஐஸ்கிறீம் எனக் கூறி ஐஸ்கிறீம் கப்பை கொடுத்து ஒரு சிரிப்பைக் கொட்டிச் சென்றாள்.

அந்நேரம் அம்புஜம் அன்னம்மாவிடம், இப்போ வந்தது எனது வெளிநாட்டில் உள்ள மருமகள் பார்த்தீர்களா? வடிவான பிள்ளை, சிரித்தால் கன்னத்தில் குழி விழுவது மேலும் அழகு தான் என்று கூறி அன்னம்மாவின் வாயைக் கிளறி விட்டாள்.

அன்னம்மா பதிலடி கொடுக்க ஏன் என்ட வயதுக்கு வடிவாகத்தான் இருக்கின்றேன்? நான் சிரிக்காமலே என் கன்னத்தில் குழி விழுகிறதைக் கவனிக்கவில்லையா என்றாள்.

அம்புஜம் வாயடைத்துப் போய் நான் போய் வாறன் எனக் கூறி அவ்விடத்திலிருந்து நகர்ந்தாள்.

அழகு எங்கே இருக்கின்றதென்று பார்த்தீர்களா????

**ஜோதி**
**உவர்மலை**

## உலக ஊனமுற்றோர் தினம் - பங்குனி - 15

உலகளாவிய ரீதியில் சர்வதேசமே அங்கீகரித்த ஊனமுற்றோர் தினமானது பங்குனி 15ம் திகதியான இன்றைய நாளில் அவர்களைப் பற்றி அக்கறையெடுத்து அவர்களுக்கு எம்மால் என்ன உதவிகள், ஒத்துழைப்புக்கள் வழங்கலாம் என எண்ணி சற்று சிந்திப்போம்.

ஊனம், ஊனம், ஊனம் இங்கே ஊனம் யாருங்கோ? உடம்பிலுள்ள குறைகள் எல்லாம் ஊனமில்லைங்கோ என கவிஞன் ஒருவர் பாடியுள்ளார். இதைப் பார்க்கையில் யார் இந்த ஊனமுற்றவவன் என்பது யார் என்றால் அது நாம் தான் எனத் தெரிகின்றது.

கண் இல்லாதவன் குருடன் ~ இவர் உலகில் நடக்கும் தீய செயல்களையும் பார்க்க மாட்டார்.
வாய் பேசாதவன் ஊமை ~ இவர் எந்தத் தேவையற்ற வார்த்தைகளையும் பேச இயலாமல் இருப்பார்.
கை, கால் இல்லாதவர் ஊனமுற்றவர் ~ இவர் எவருக்கும் விரல் நீட்டிக் கதைக்கவோ காலால் உதைக்கவோ, அடிக்கவோ மாட்டார்.
காது கேளாதவர் ~ ஊனமுற்றவர் தான் எந்தப் பழிச்சொற்களையும் கேட்க மாட்டார்கள்
இப்படிப்பட்டவர்களைத் தான் சமுதாயம் ஊனமுற்றோர் என முத்திரை குத்துகின்றனர்.
ஆனால் இவர்கள் தான் ஷஷவாழும் கடவுளாகின்றார்கள் இவர்களை சமுதாயத்தில் இருந்து விலக்கி விடாதீர்கள். அன்பாகப் பழகுங்கள். இயலுமான உதவிகளைப் புரியுங்கள். இவர்களை விட எதுவித குறைபாடுகளும் இல்லாதவர்கள் எவ்வளவோ தீய செயல்களைப் புரிந்தோ, பார்த்தோ, கேட்டோ, பேசியோ இருக்கிறார்கள் இவர்கள் தான் ஊனமுற்றோர்.

ஏன் இந்த ஊனம் பிறப்பிலிருந்து திடீர் நோயின் தாக்கங்கள், விபத்துக்கள் மூலம் இது போன்ற நிலைமைகளில் ஏற்படுகின்றது. இவர்களும் திறமைசாலிகள். இப்படிப்பட்டவரில் சிலர் உயர் அதிகாரிகளாகவும் விளையாட்டுக்களில் சிறந்தவர்களாகவும் சிறந்த கல்வி மான்களாகவும் திகழ்ந்து மக்களுக்கு தங்களால் இயலுமான அளவில் சேவை செய்யக் கூடியவர்களாகவும் வாழ்கின்றார்கள்.

எந்த மனிதனதும் வாழ்க்கை நிரந்தரமில்லை. இந்தக் குறுகிய கால வாழ்வில் எத்தனை எண்ணங்கள், சிந்தனைகள்? நான் பெரிது, நீ பெரிது, என்னால் மட்டும் தான் முடியும், நான் உயர்ந்தவன், நீ தாழ்ந்தவன் எனக் கூறி சமுதாயத்தில் உயர்ந்த ஸ்தானத்தை எதிர்பார்ப்பவர்கள் எத்தனை பேர்?

இந்நிலை மாற வேண்டும். பால் சமத்துவம் பேணப்பட வேண்டும். எல்லோரிடமும் அன்பாகப் பழகி மனித நேயத்துடன் நடக்கும் போது நாமும் சமுதாயத்திற்கேற்ற மக்களாகத் திகழ்வோம். காலப்போக்கில் ஊனமுற்றோர் தான் ஊனமுற்றவர் என்கிற மனநிலை முற்றாக மாறும் எனும் பாகுபாடற்ற ஒற்றுமையான குடும்பமாக மாறும் நம்பிக்கை உண்டு. நாளை எமக்கும் இதே நிலைமை வராது என என்ன நிச்சயம் எனக் கூறும்...............

**ச. அந்தோனிப்பிள்ளை J.P**

## மாதம் ஒருபுதுமை



### தூய வின்சன்ட் பெரர்,

14 ~ 15 ம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர் புதுமைகளுக்குப் பெயர் பெற்றவர். தனது 46 வயதில் கடுமையான நோயினால் தாக்கப்பட்டு படுக்கையில் இருந்தபோது இயேசு இவருக்குக் காட்சியளித்து **'பாவிகளுக்குப் போதிக்க நான் உன்னைத் தெரிவு செய்துள்ளேன்'** என்றார். அந்நேரமே அவர் குணமடைந்தார்.

பெம்பெலூனா எனுமிடத்தில் செய்யாத குற்றத்திற்காக ஒருவர் மரண தண்டனைத் தீர்ப்பிடப்பட்டார். இதையறிந்து தாய வின்செண்ட் நிரபராதிக்குச் சார்பாக பேசியும் எதுவும் நடைபெறவில்லை. இம்மனிதர் கொலைக்களத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட வழியில் இன்னுமொரு பவனியை சந்தித்தனர். அது இறந்த ஒருவருடைய அடக்கத்திற்கான பவனி.

இதைக் கண்டதும் தூய வின்செண்ட இறை ஏவுதலைப் பெற்றவராக பவனியை நிறுத்தி இறந்தவரைப் பார்த்து இவ்வாறு கூறினார்: **"இங்கு படுத்திருப்பதில் உமக்கு எப்பயனும் இல்லை. எனக்குப் பதில் கூறும்: இம்மனிதர் குற்றவாளியா?"** உடனேயே இறந்த மனிதர் எழுந்து அமர்ந்து **'இவர் குற்றவாளி இல்லை'** என்றார். மக்களும் நடந்த சம்பவத்தைப் பார்த்துப் பிரமித்து கொலைக்களத்திற்குக் கொண்டு செல்லப்பட்டவரை விடுவித்தனர்.

இறந்தவர் மீண்டும் பாடையில் படுத்தார். உடனே தூய வின்செண்ட் அவரைப் பார்த்து நீர் செய்த உதவிக்காக தொடர்ந்து உயிரோடு இருக்கலாம் என்றார். ஆனால் அம்மனிதரோ **"வேண்டாம் குருவானவரே, எனக்கு மோட்சம் காத்திருக்கிறது"** என்றார். அப்போது தூக்கத்திற்கு செல்பவரைப்போல இவர் இறந்தார். வந்தவர்கள் தொடர்ந்தும் அவரை அடக்கத்திற்காக தூக்கிச் சென்றனர்.

## கத்தோலிக்க பாடசாலைகளில்
## க.பொ.த சா/தர பெறுபேறுகளும் சாதனைகளும்

**தி/ புனித மரியாள் கல்லூரி:** 9A ~ 9 மாணவர்கள்
129 மாணவர்கள் தோற்றி 79% மாணவர்கள் க.பொ.த உ/தரத்திற்கு முன்னேறுகின்றனர்.

**தி/ புனிதசூசையப்பர் கல்லூரி:** 9A ~ 1 மாணவர்
**தி /புனித பிரான்சிஸ் சவேரியார் மகா வித்தியாலயம் :** 8A ~ 1 மாணவர்

பாடசாலை சாதனைகள்
4 மாணவர்கள் கணித்தில் A பெற்றுள்ளனர்.
1 மாணவர் தேசிய கணிதப் பரீட்சைக்குத் தெரிவாகியுள்ளார்.

**தி/ புனித அந்தோனியார் மகா வித்தியாலயம் மூதூர்:**
5A 2B 2C ~ 1 மாணவர்



**தி/ புனித இருதய ஆண்டவர் வித்தியாலயம்:**
1A 3B 3C 2S ~ 1 மாணவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை கத்தோலிக்க பாடசாலைகளின் சாதனைகள் ~ க.பொ.த (உ/த) பரீட்சை ~ 2016

**தி/புனித சூசையப்பர் கல்லூரி**

க.பொ.த (உ/த) ~ 2016 பரீட்சையில் இக்கல்லூரியைச் சேர்ந்த செல்வன் அப்லால் முகமட் அப்ஹாம் என்பவர் பௌதீக விஞ்ஞானப்பிரிவில் (கணிதப்பிரிவு), 3A தரம் சித்தியைப் பெற்று, மாவட்ட ரீதியில் இரண்டாம் நிலையிலும், அகில இலங்கை ரீதியில் பதினொராவது நிலையிலும் பொறியியல் துறைக்குத் தெரிவாகி பாடசாலைக்குப் பெருமை சேர்த்துத் தந்துள்ளார். இங்கு கணிதப்பிரிவு மாணவர்கள்100% சித்தியைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**தி/ புனித மரியாள் கல்லூரி**

உயர்தரப் பரீட்சை வர்த்தகப் பிரிவில், இக்கல்லூரியின் மாணவி செல்வி இக்னேஷியா இதயராஜ் என்பவர் 3A சித்தி பெற்று, மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தையும் அகில இலங்கை ரீதியில் 52வது இடத்தையும் தனதாக்கி கல்லூரியின் பெருமையில் தடம் பதித்துள்ளார்.

மேலும் இக்கல்லூரியிலிருந்து மருத்துவத்துறைக்கு 3 மாணவர்களும், பொறியியல் துறைக்கு ஒரு மாணவியும் வர்த்தகப் பிரிவிலிருந்து 6 மாணவர்களும் தெரிவாகியுள்ளமையும் பெருமகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

கத்தோலிக்க கல்வியியலாளர்களை ஒன்றிணைத்து திருகோணமலை மாவட்ட கல்வி வளர்ச்சியை நோக்காகக் கொண்டு **"COFET" (Catholic organization for Education in Trincomalee)** அமைப்பை உருவாக்கிய அதன் தலைவரான எமது மறைமாநில ஆயர் அதி மேதகு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் அவர்களின் ஆர்வத்தையும், ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் ஊக்குவிப்பையும் நாம் இவ்விடத்தில் நன்றியோடு நினைவு கூறுகின்றோம்.

**தகவல்**
**ஜெயவதனி மரியதாஸ்**
**செயலாளர் "COFET"**
**(ஓய்வு நிலைப்பணிப்பாளர்கள், அதிபர், ஆசிரிய ஆலோசகர்)**

# உண்மை அன்பு

அவன் ஆழமாக அன்பு செய்து திருமண உறவில் இணையவிருக்கும் போது தான் அந்த சோக நிகழ்வு இடம்பெற்றது. ஜோர்ஜ் தன் கண்ணை பரிசோதிப்பதற்காக வைத்தியரிடம் சென்றான் தான் சிறிதாக பார்வை இழந்துவருவதாகவும் ஆறுமாதங்களில் அந்தகனாகிவிடுவான் என்பதையும் பரிசோதனையில் அறிந்துகொண்டான். உள்ளம் வருந்தி நொங்கியவனாக வேதனைப்பட்டபோதும் அதனை தான் அன்பு செய்த மேரியிடம் மறைக்க விரும்பவில்லை எனவே மேரி தன்னை உண்மையாக அன்பு செய்தாள் அவள் தன்னோடு வாழ்ந்து தன்னை பராமரிப்பாளென உணர்ந்தான். இந்த எண்ணத்தோடு தன் இனியவளின் இல்லம் சென்று அன்பே உனக்கு ஒரு கவலைக்குரிய செய்தியைத் தரப்போகிறேன் நமது திருமணநாள் அன்று நான் முழு குருடனாகி விடக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதென எனது வைத்தியர் கூறினார்.

'திடீரென மேரியின் பிடியில் இருந்து ஜோர்ஜ் விலகுவதை அவனால் உணர முடிந்தது பிடி விலகியதும் அவள் கண்ணீர் மல்க கூறினாள். என்னை மன்னித்துவிடுங்கள் ஜோர்ஜ் கண் தெரியாத ஒருவரை திருமணம் செய்து வாழ என்னால் முடியாது என்றாள். நொறுங்குண்ட உள்ளத்துடன் உலகத்தில் அனைத்தையும் இழந்தவனாக வேதனையின் விளிம்பிலே தடுமாறியவனாக வீட்டை நோக்கி நடக்கிறான் வீட்டை அடைந்ததும் நிதானமாக அமர்நது சிந்திக்கிறான். ' இந்த பரந்த உலகிலேயே எனக்கென இருப்பவர் இறைவன் ஒருவரே.'

**ஆக்கம் ரவிசங்கர்**
**செல்வநாயகபுரம்**

# தூய யோசேப் வாஸ்

ஆயிரத்து அறுநூற்று ஐம்பத்து ஒன்றினிலே
இந்தியாவில் பிறந்தவராம் தூய யோசேப் வாஸ்
இளைய குருவாக எத்தனையோ துன்பங்கள் மத்தியிலும்
இறைவனின் நற்செய்தி அறிவிக்க
இலங்கைக்கு வந்தாரம் தூய யோசேப் வாஸ்



ஒல்லாந்தர் காலமது
ஒடுக்கப்பட்ட மக்களுக்கு
கிறிஸ்தவம் காணாமல் போன காலமது
இத்தனைக்கு மத்தியிலும்
தன் உயிரை துச்சமென எண்ணி ~ ஒரு
கூலிக்காரனைப்போல் வேடம் பூண்டு
இலங்கைக்க வந்தாராம் தூய யோசேப் வாஸ்

தனியொருவராக அவர் புரிந்த பணிகளோ எண்ணிலடங்கா
இருபத்தொன்பது ஆண்டுகளாய் தனிமையிலே
இலங்கைக்கு இரட்சிப்பு கிடைக்க வேண்டி பணிபுரிந்தாரே
இலங்கைக்கு இரட்டிப்பாய் நற்செய்தி பணி செய்ய
இன்னும் சில குருக்களையும் வரவழைத்தார்
இறுதியில் இறை சித்தத்தை நிறைவேற்றி
சம்மனசுக் கூட்டத்தில் சேர்ந்து கொண்டார்
சம்மனசுச் சுவாமி தூய யோசேப் வாஸ்

**சு. கௌசல்யா**

# கவிதை

பாடுகள் நிறைந்த பாதையிலே
பாடுகள் படுகின்ற கோலமது
கேடுகள் நிறைந்தே கூடியோரின்
கெடுமதி நிறைந்த முடிவுகளால்
பொல்லாத நிலைகள் ஒன்றாகியே
பொங்கியே ஒன்றாக எழும் போதங்கு
எல்லைகள் கடந்த துயரினிலே
ஏங்கியே செல்லும் இயேசு பிரான்
சொல்லிட முடியாத் துயர்களினால்
சோகங்கள் பெருகிக் கொண்டவராய்
பாரமாம் சிலுவையைத் தோள் மீது
பாவமாய்ச் சுமந்தே செல்கின்றாரே.

இரட்ணராஜா மேரி ரொசாணி
இலிங்கநகர்



தொடர் - 02

# நல்லாசிரியர்: ஆளுமையும் ஆன்மீகமும் இறைவனைநாடும் ஆசிரியர்

கடவுள் யார், எப்படிப்பட்டவர்? கிறிஸ்தவம் சித்தரிப்பது போல நீண்ட வெள்ளைத் தாடியுடன் வரங்களை வழங்க பரலோகத்தில் காத்திருக்கும் வயோதிபர் அல்ல. ஆலயங்களில், கோவில்களில், பள்ளிவாசல்களில் மட்டும் பிரசன்னமாய் இருப்பவரல்ல. நீண்ட பயண யாத்திரைகளையும் உடல் ஒறுத்தல்களையும், கடினவிரதங்களையும், பலிகளையும், காணிக்கைகளையும் எதிர்பார்ப்பவருமல்ல. அவரைசந்திக்க, அவரது பிரசன்னத்தை கண்டுகொள்ள எளிமையான இதயம் போதுமானது. தாகூர் கூறுவது போல ஆலயங்கள், கோவில்கள், பள்ளிவாசல்களில் கடவுளின் பிரசன்னம் இருந்தாலும் அங்கு மட்டும்தான் அவர் பிரசன்னமாய் இருக்கின்றார் என்பதல்ல. ஏழைகளிலும், எளியவர்களிலும், கைவிடப்பட்டவர்களிலும் கூட அவர் இருக்கிறார். மிருகங்களில், பறவைகளில், இயற்கையில் ஏன் நாம் வெளிவிடும் ஒவ்வொரு மூச்சிலும், பருகும் ஒவ்வொரு துளிநீரிலும் அவர் இருக்கின்றார். பிரபல்யம் மிக்க ஜேர்மன் இறையியலாளர் (BONHOEFFER) கூறுவதுபோல, ~ எமது இருத்தலின் அடிநாதமாக இறைவன் இருக்கின்றார். |(God is in the ground of our being) அவர் இல்லாமல் நாம் ஒன்றும் இல்லை, எம்மால் எதுவும் செய்யமுடியாது. எமது இருப்பின் மையம் இறைவனால் எம்மை ஒன்றும் இல்லாமையில் இருந்து (தொட.நூல்) உண்டாக்கினார் என்பதையும், தொடர்ந்து எம்மை காத்து வருகின்றார் என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். நாம் உச்சரிக்கும் ஒவ்வொரு வார்த்தைக்கும், சிந்தனைக்கும், நடத்தைக்கும் அவரிடத்திலேயே தங்கி இருக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

இறைவனின் துணை இன்றி இத் தொடரை எழுத நான் ஆரம்பித்திருக்க முடியாது .எனதுஐம்பதாவதுபிறந்ததினத்தில் (இரு வருடங்களுக்கு முன்) இதை ஒரு நூலாக தொகுத்து வெளியிட வேண்டும் என விரும்பியிருந்தேன் பாடசாலை நிர்வாகவேலைப் பழுவினால் இது முடியாமல் போனது. அதன் பிற்பாடும் பலதடைகள் குறுக்கிட்டு,இறைவனின் திட்டத்தில் இப்போதுதான் இம் முயற்சி சாத்தியமாகியுள்ளது. இவ்வாறான சிறுமுயற்சியை கூட செய்வதற்கு இறைவனின் உதவி தேவைப்படுகின்றது என்றால் ஆசிரியர் ஒருவருக்கு எந்த அளவுக்கு இறைவனின் உதவிதேவைப்படும் என ஊகிக்கலாம்.

ஆசிரியர் பேசும் ஒவ்வொரு வார்த்தையும், ஒவ்வொரு அசைவும் (Positive or Negative) அவரது மாணவருக்கு பல விடயங்களை கற்பிக்கின்றன. கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் மூன்று விடயங்கள் பொதுவாக முன்னிலைப் படுத்தப்படுகின்றன.

01. ஆசிரியர்
02. மாணவர்
03. பாடம் (கற்பிக்கப்படும் விடயம்)

இந்த மூன்றிலும் இறைவன் பிரத்தியேக கவனம் செலுத்துகின்றார். தனது சாயலாக படைக்கப்பட்டவர்கள் என்ற முறையில் ஆசிரியரிலும், மாணவரிலும் இறைவனின் கவனம் கட்டாயமாக இருந்தே ஆக வேண்டும். அதுமட்டுமன்றி கற்பிக்கப்படும் விடயத்திலும் (Subject matter) கடவுள் மிகுந்த அக்கறை உடை~யவராக இருக்கின்றார். ஏனெனில் எல்லா அறிவும், ஞானமும் அவரிடமிருந்தே வருகின்றன. கற்றல் கற்பித்தலில் மிக முக்கியமாக வலியுறுத்தப்படுகின்ற விடயம் ஆசிரியர் மாணவர் உறவு ஆகும். ஆசிரியர் மாணவரோடு எவ்வாறு உறவு கொள்கின்றார்? எந்த அளவுக்கு கடும் போக்கையாளுகின்றார்? எந்த அளவுக்கு மென் போக்காக இருக்கின்றார்? எந்த அளவுக்கு மாணவர்களை அன்புசெய்கின்றார்? இறைவனை நாடுகின்ற ஆசிரியரை பொறுத்தவரை இக்கேள்விகளுக்கான விடையின் பின்புலத்தில் ஆசிரியருக்கெல்லாம் ஆசானாக இருக்கும் இறைவன் தாமே இருக்கின்றார் என்பதை நினைவில் கொள்வர்.

வகுப்பறை சூழலுக்கும், சந்தர்ப்பங்களுக்கேற்ப ஆசிரியரின் நடத்தைகளும் மாறுபடும். ஆசிரியரோடு ஒத்துழைக்காத, குழப்படிகார, கீழ்ப்படிவற்ற மாணவர்களோடு அவ்வப்போது கடும் போக்கையாள வேண்டிய கட்டாயம் ஏற்படும். மிதமிஞ்சிய விட்டுக் கொடுப்பும், மென்போக்கும் மாணவரை பிழை~யான பாதையில் இட்டுச் செல்லக் கூடும். இவ்வாறான நிலமைகள் ஏற்படும் போது ஆசிரியருக்கு கைகொடுக்கக கூடியது அவரது அறிவும், அனுபவமும் ஆகும். சிலவேளைகளில் அறிவும், அனுபவமும் கூட கைகொடுக்காமல் போகின்ற போதுமகா ஆசானாகிய இறைவனிடத்தில் கொண்டிருக்கும் நம்பிக்கையும், அதன் அடிப்படையில் எழுகின்ற உருக்கமான ஒரு செபமும் மிகுந்த பலனைக் கொடுக்கும். இறை அனுபவத்தோடு வாழுகின்ற ஆசிரியருக்கு மட்டுமே இவை எல்லாம் சாத்தியமாகும்.

எவ்வளவுதான் அறிவைப் பெற்றிருந்தாலும், புத்திசாலியாகவும், அனுபவ~சாலியாகவும் இருந்தாலும் பாடப்பரப்பில் சிலபகுதிகள் ஆசிரியர்களுக்கு விளங்கிக் கொள்ளவும், கற்பிக்கவும் கடினமாக அமைவதுண்டு. இவ்வேளைகளில் ஞானத்தின் இருப்பிடமான இறைவனை தேவையேற்படும் போதெல்லாம் வகுப்பறையிலோ, பாட ஆயத்த வேளையிலோ அணுகுவது பயனளிக்கும் முயற்சியாக அமையும். ஆக ஆசிரியர் ஒருவர் செபவீரனாக / வீராங்கனையாக இருக்கவேண்டும். தனதுபணியில் ஆசிரியர் நிறைவையும், வெற்றியையும் காண வேண்டுமெனில் இறைவனைத் தேடுபவராகவும், அவரது பிரசன்னத்தில் வாழ்பவராகவும் இருக்கவேண்டும்.

"More things are wrought by prayer
Than this world dreams of" - Alfred Tennyson-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைமாவட்ட ஆயரின் செய்தி

1ம் பக்கத் தொடர்ச்சி

ஒழுங்கு செய்து நெறிப்படுத்துவ தென்பது இலகுவான விடயமல்ல. அனைவரினதும் கடின உழைப்பு வெற்றியைத் தந்தது. அழகான காலநிலை, திட்டமிட்ட மேடை அமைப்பு, கலைஞர்களின் அர்ப்பணம் அனைத்தும் இறைவனின் ஆசீராக அமைந்துள்ளன. இவை அனைத்தையும் நெறிப்படுத்திய அருட்பணி றொகான் பேணாட் அடிகளைநாம் பெரிதும் பாராட்டுகின்றோம். இரவு பகலாக இடீ தசிந்தனையோடு உழைத்தவர் இவர். மறைமாவட்ட சமூகத் தொடர்பாடல் இயக்குனராக தனது ஆற்றல்களை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளார். அருட்தந்தையை நான் பெரிதும் பாராட்டி நன்றி கூறுகின்றேன்.

திருப்பாடுகளின் காட்சி என்பது இன்னொரு வகையான மறைக்கல்வியாகும். இக்காட்சிகளின் மூலம் பார்வையாளர்கள் இயேசுவின் இறுதி நாட்களை கற்றுக்கொள்கிறார்கள்.

மார்ச் மாதம் நடைபெற்றஓர் கோரவிபத்தில் அருட்பணியூட் ஜோண்சன் அடிகளாரின் அக்கா, அவரது கணவர், மகள் மூவரும் இறந்துள்ளனர். இது அனைவரையும் பெரும் துயரில் ஆழ்த்தியது. அருட்தந்தைக்கும் அவரது உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இழப்பை அனுமதிக்கிற அதே ஆண்டவர் எமக்கு ஆசீரையும் தருகிறார் எனும் நம்பிக்கையில் உறுதியாக இருப்போம்.

மீண்டும் உங்கள் அனைவருக்கும் உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துக்களைக் கூறி முடிக்கிறேன். இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

**கிறிஸ்துவில்,**
**பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்**
**திருகோணமலை மறைமாவட்ட ஆயர்**

## தூய லூர்து அன்னை திருத்தலத்தில் யாத்திரை மண்டபம்

பாலையூற்று தூய லூர்து அன்னை திருத்தலத்தில் அன்னையின் பரிந்துரையை நாடிவரும் பக்தர்களின் நலன் கருதி யாத்திரை மண்டபம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும்.

இந் நிகழ்வானது இவ்வருடம் 01. 01. 2017 அன்று மு.ப 8.00 மணிக்கு வண ஆயர் கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களால் இறையாசிருடன் தூய லூர்து அன்னை திருத்தல யாத்திரை மண்டபம் திறந்து வைக்கப்பட்டது. மேலும் ஆயருடன் இணைந்து பங்குத்தந்தை உதவிப் பங்குத்தந்தை பங்குச் சமூகம் ஒன்று கூடி இந் நிகழ்வை சிறப்பித்தார்கள்.

**புகைபடங்கள் 12ம் பக்கத்தில்...**

## தூய லூர்து அன்னை திருத்தலத்தில் இலவச கணனி வகுப்பு

பாலையூற்று தூய லூர்து அன்னை திருத்தலத்தில் கணனி அறிவை ஊக்குவிக்கும் முகமாக 21 தாய்மார்களுக்கு இலவச கணனி வகுப்பு நடைபெற்றது. இவர்களுக்கான சான்றிதழ்கள் திருகோணமலை **Soft view computer centre** இனால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்தக் கணனி வகுப்பிற்கான அனுசரணையை நெதர்லாந்தைச் சேர்ந்த **anna Munds foundation** வழங்கியிருந்தார்கள். என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பயிற்சியை முடித்த அனைவருக்கும் எமது மறைமாவட்ட ஆயர் வண நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்கள் சான்றிதழ்களை வழங்கி அவர்களை கௌரவித்தார்.

தற்போது O/L பரீட்சை எழுதி முடித்திருக்கும் மாணவர்களுக்கான கணனிப்பயிற்சி தொடர்ந்தும் நடைபெறுகின்றது.

**தகவல் அ. சகாயம்**
**பாலையூற்று**

**புகைபடங்கள் 12ம் பக்கத்தில்...**

*உங்கள் ஆக்கங்கள், கவிதைகள், கட்டுரைகள், பங்கின் செய்திகளையும் ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்பு எதிர்பார்க்கின்றோம். அவற்றை திமலைத் தீபத்திற்கு அனுப்பிவைக்கவும்.*
*குறிப்பு: பங்கு சார்ந்த செய்திகளை பங்குத்தந்தையின் அனுமதியுடன் அனுப்பிவையுங்கள்.*

*அனுப்ப வேண்டிய முகவரி :– ஆசிரியர்*
*திருமலைத் தீபம் 297, டொக்கியாட் வீதி,*
*திருகோணமலை.*

**அன்பிற்குரிய,**

பங்குத் தந்தையர்களுக்கும், பங்கு மக்களுக்கும் நாங்கள் நன்றியுணர்வோடு அறியத்தருவது யாதெனில் எமது பங்கின் மேய்ப்புப்பணிசபை உறுப்பினர்கள் கடந்த ஞாயிறு (19.02.2017) முன்னறிவித்தலோடு தங்களது பங்கிற்கு வருகை தந்து எமது பங்கைச் சேர்ந்த செல்வி ரெஜினா றொபின் அவர்களுடைய சிறுநீரக மாற்று சிகிச்சைக்காக பண உதவி கோரிய வேளையில் நீங்கள் அனைவரும் தாராள உள்ளத்தோடு உதவி செய்ததன் வாயிலாக இதுவரை நாங்கள் ரூபா 256,560.00 (இரண்ட இலட்சத்து ஐம்பத்து ஆறாயிரத்து ஐந்நூற்று ஆறுபது ரூபாய்) நிதயை திரட்டக் கூடியதாக இருந்தது என்பதை மகிழ்சியோடு நன்றியுணர்வோடும் அறியத் தருகின்றோம். நாங்கள் உங்களை நினைவு கூரும்பொழுதெல்லாம் உங்களுக்காக ஜெபிக்கின்றோம். இறைவன் உங்களையும் உங்கள் பங்கு மக்களையும் இன்னும் நிறைவாய் ஆசிர்வதிப்பாராக இரக்கத்தின் ஆண்டின் தொடர்ச்சியாக இதனை முன்னெடுக்க அனுமதி வழங்கிய மறைமாவட்டத்தின் ஆயர் அதி. வந். கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகைக்கு எமது விஷேட நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

**நன்றி**

**கிறிஸ்துவின் பணியில்**
**அருட்பணி இ. யூட்சர்வானந்தன்**
**(பங்குத்தந்தையுடன் பங்கு மக்கள்)**

# குட்டிக்கதை ஒன்று

F.r. N.C

ஒரு சிறிய கிராமத்துப் பாடசாலை. அங்கே ஆசிரியர் ஒருவர் ஒரு மாணவனுக்கு வகுப்பிலே வைத்து அடித்து விட்டார். மாணவர் அழுது கொண்டு வீட்டிற்குச் சென்று அப்பாவைக் கூட்டி வந்து விட்டான். மாணவனின் தந்தை பெரிதாகச் சத்தமாய்க் கேட்கிறார். ஷஷஎன்ன ஐயா என்ர மகன் கானா, தானா, வுனா கரவு எண்டு சொன்னதுக்கு அடிச்சிருக்கீங்களே அவன் சொன்னதில என்ன பிள சொல்லுங்களன்

ஆசிரியர் திடீரென்று யோசித்து விட்டுச் சொன்னார், ஷஷஇங்க பாருங்க நான் சொல்லிக் கொடுத்தனான் கானா, தானா, வுனா கரவு என்று உங்கட மகன் சொன்னான் கதவு என்று சொன்னவன் அது தான் அடிச்சனான்.

அப்பா கேட்டார் அப்பிடியா சொன்னான் என்று சொல்லிக் கொண்டு மகனின் தலையிலே ரெண்டு குட்டுப் போட்டார். நல்ல வேளை ஆசிரியரின் திடீர்ப்புத்தியால் குட்டு அவருக்கு விழவில்லைத் தப்பி விட்டார் என்ன?

## மரணத்தை வெற்றி கொண்டார்

FR NC

- மாறி இருக்கும்
- கவிதை வரிகளை
- பெரிய தாளிலே
- சரியாக வடிவமையுங்கள்

முதலாம் இடம் ~ 800/=
இரண்டாம் இடம் ~ 500/=
மூன்றாம் இடம் ~ 300/=

- எல்லோரும் சரியாக வடிவமைத்தால் குலுக்கல் மூலம் தெரிவு

முடிவுத் திகதி : 25. 05. 2017

**இதோ கவிதை வரிகள்**

- மரணித்தார் சிலுவையிலே நமக்காக
- கல்வாரி மலை கண்ட கண்ணீராறு
- புண்ணாக்கி மனங்களைப் புண்படுத்த
- மனிதரின் தீர்ப்பு எதுவாக இருந்தாலும்
- மண்ணின் துயர் துடைக்க வந்த மகான்
- மனங்களே நிறைந்து புகழ்ந்திடுமே
- மரணத்தை வென்ற மாபரன் யேசுவை
- மரணம் யேசுவை மறைக்கவில்லை

1ம் பக்கத் தொடர்ச்சி......

# சமாதானத்தை முன்னிட்டு .....

சிங்கள, தமிழ் நல்லிணக்கத்தை முன்னிட்டு கடந்த 2017. 02. – 10, 11, 12ம் திகதிகளில் சிலாபத்தில் உள்ள **'மங்கல எலிய'** கிராமத்திலிருந்நு 45 சிங்கள சகோதரர்கள் 'இருதயபுரம்' திரு இருதய ஆண்டவர் ஆலயத்திற்கு வருகை தந்திருந்தார்கள். அவர்களை எமது கிராம மக்கள் எகெட் கரித்தாஸ் இயக்குனர் அருட்பணி பு. நிதிதாசன் மற்றும் பணியாளர்கள் அனைவரும் சேர்ந்து வருகை தந்தவர்களை பூத்தூவி, மாலை அணிவித்து, மிளவும் விமரிசையாக வரவேற்கப் பட்டார்கள். அஅதனைத் தொடர்ந்து மங்கள விளக்கு ஏற்றப்பட்டது. பின்னர் வருகை தந்தவர்களை எமது இருதயபுர பங்குத்தந்தை அருட்பணி சுதர்ஷன் அவர்கள் சிங்கள மொழியில் வரவேற்றார். அதன் பின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றது. பின்னர் வருகை தந்தவர்கள் எமது கிராம மக்களின் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். அவர்கள் 10, 11, 12ம் திகதிகள் வரை எம்மோடு இணைந்திருந்தார்கள். அந்நாட்களில் கலை நிகழ்வுகள், தியானங்கள், கலாச்சார நிகழ்வுகள் விளையாட்டுக்கள் என்பன இடம்பெற்றன.

இதனையடுத்து 12ம் திகதி காலை திருப்பலி முடிவுற்றதுடன் அவர்களின் பயணம் ஆரம்பமானது. இதன்போது இருதயபுர பங்குமக்களுக்கும் (சிலாபம்) **'மங்கல எலிய'** கிராம மக்களுக்குமிடையில் ஒரு சமத்துவம் ஏற்ப்பட்டது. பல பண்டமாற்றங்களும் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 22. 02. 2017 அன்று எமது இருதயபுர கிராமத்தில் இருந்த (சிலாபம்) **'மங்கல எலிய'** கிராமத்திற்கு 40 அங்கத்தவர்கள் அழைத்து செல்லப்பட்டார்கள். அங்குள்ள மக்களும், பங்குத் தந்தையர்களும் விசேடமாக அருட்பணி அன்ரன் வயம்பன் குருஸ் அவர்களும் **ஜனசேஷய** செடக் அங்கத்தவர்களும் வெற்றிலை, பூமாலை , பூக்கள் இசை வாத்தியங்கள் இசைத்து சிறப்பான முறையில் வரவேற்றார்கள். அதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றல், கலாச்சார நிகழ்வுகள் என்பன ஒழுங்கு முறைப்படி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து அங்குள்ள மக்களின் வீடுகளுக்கு ஒவ்வொரு அங்கத்தவர்கள் அனுப்பப்பட்டு கவனிக்கப்பட்டார்கள். பின்னர் விளையாட்டுக்கள், கலைநிகழ்வுகள், தீப்பந்தம் ஏற்றிய கலாச்சார நிகழ்வுகள், தியானங்கள் என்பன நடைபெற்றது. 22, 23, 24ம் திகதி வரை நாங்கள் ஒன்றாய் ஒரே சமூகமாய் இணைந்திருந்தோம். 24ம் திகதி எங்கள் கிராமத்தை நோக்கிய பயணம் இடம் பெற்றது. இதன் மூலம் உறவு பரிமாற்றங்கள் என்பன இடம்பெற்றது. எனவே இது போன்ற ஒரு உறவுப் பாலத்தை ஏற்பப்படுத்தி தந்த எகெட் கரித்தாஸ் நிறுவனத்திற்கு எமது இருதயபுர கிராம மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றிகளை கூறுவதோடு இப்பணி சிறந்தோங்க இறைத்தந்தையை பிரார்த்திப்போம். என்றும் எங்கள் உறவுப்பாலம் தொடரும் என்றும் மகிழ்வுடன் கூறி நிற்கின்றோம்.

**தகவல்:**
**அருட்பணி J. சுதர்ஷன்**
**திரு இருதய ஆண்டவர் ஆலயம்**
**இருதயபுரம்**
**மூதூர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லறை வெறுமையாய் இருந்தது

கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை பயனற்றதே (1 கொரி 15:17) என்று பவுலடிகளார் உயிர்ப்பில் நாம் கொண்டிருக்க வேண்டிய நம்பிக்கையைப் பற்றியும் அதனுடைய முக்கியத்துவத்தைப் பற்றியும் கூறுகின்றார். இயேசு சிலுவையில் மரித்தார் என்பது ஒரு வரலாற்று நிகழ்வு. மரித்தவரை கல்லறையில் அடக்கம் செய்தார்கள் என்பதும் வரலாற்று நிகழ்வே. ஆனால் அதன் பிறகு நடந்தவைகள் அதாவது அவருடைய உயிர்ப்பு, அவருடைய சீடர்களின் அனுபவமே. எனவே. உயிர்ப்பு நிகழ்வைப் பற்றிய பின்னணிக் கருத்துக்களையும் சிந்தனைகளையும் பின்வரும் பகுதியில் பகிர்ந்து கொள்வோம்.

இயேசு வெள்ளிக்கிழமை மாலை கல்லறையில் அடக்கம் செய்யப்படுகின்றார். ஞாயிற்றுக்கிழமை காலையில் அவருடைய உடல் அங்கே இல்லை. ஷஷஆண்டவரை கல்லறையில் இருந்து யாரோ எடுத்துக் கொண்டு போய் விட்டனர், அவரை எங்கே வைத்தனரோ எங்களுக்குத் தெரியவில்லை (யோவான் 20:2) இறந்த இயேசுவை, கல்லறையில் அடக்கம் செய்யப்பட்ட இயேசுவை காணவில்லை என்பது தான் வரலாற்று நிகழ்வு. அதே போல் கல்லறையும் வெறுமையாக இருந்தது. இதுவும் வரலாற்று நிகழ்வு. எல்லா நற்செய்தியாளர்களும் கல்லறை வெறுமயாகத்தான் இருந்தது என்பதை முன் வைக்கிறார்கள். மாற்கு நற்செய்தியில் 16:8 ல் கல்லறைக்குச் சென்ற பெண்கள் அஞ்சி பயந்து ஓடினார்கள் எனக் கூறப்படுகின்றது. இதைத்தான் உயிர்ப்பு நிகழ்வின் கரு என்று விவிலிய விளக்க உரையாளர்கள் கூறுவார்கள். கல்லறை வெறுமையாக இருந்தது. வெறுமையை கண்ட சீடர்களின் முதல் எதிர்வினை, அச்சம், இடத்தை விட்டு ஓடுதல். ஆகவே, கல்லறை வெறுமையாக இருந்தது என்பது ஒரு வரலாற்று நிகழ்வு. கல்லறை வெறுமையாக இருந்திருந்தால் அங்கு அடக்கம் செய்யப்பட்ட உடல் என்னவாயிற்று என்பது தான் கேள்வி. நம்பிக்கையற்ற மக்கள் பல தவறான பதில்களை கூறலாம். ஆனால், நம்பிக்கையின் மக்களாகிய நமக்கு தரப்படுகின்ற பாடம் இறந்தவர் உயிர்த்து விட்டார்.

இயேசுவின் உடலை யாராவது தூக்கிச் சென்றிருந்தாலும் கூட அவர்கள் அவரை அவரது உடலைச் சுற்றியிருந்த துணிகளோடு தான் தூக்கிச் சென்றிருக்க வேண்டும். ஏனென்றால் அவர் இறந்து மூன்றாவது நாளாகி விட்டது. இறந்த உடல் அழுகி, நீர் சொட்டிக் கொண்டிருக்கும். துணிகளை மட்டும் விட்டு விட்டு உடலை எடுத்துச் செல்வது கடினம். இயேசு உயிர்த்து விட்டார் என்பதை யோவான் 20:6~7 ல் சொல்லாமல் சொல்லுகின்றார். அங்கு துணிகளையும் இயேசுவின் தலையை மூடியிருந்த துண்டையும் கணடார். அத்துண்டு மற்றத் துணிகளோடு அல்லாமல் ஒரு இடத்தில் தனியாக வைக்கப்பட்டிருந்தது. யோவான் நற்செய்தியாளர் சொல்ல வருவது என்னவென்றால் உயிர்த்தவர் (அல்லது வானதூதர்) துணிகளை சரி செய்து ஒரு புறம் வைத்து விட்டு, தலைப் பாகையை மறுபுறம் வைத்துவிட்டு கல்லறையை விட்டு வெளியேறி இருக்க வேண்டும். இந்த நிகழ்வை மத்தேயு நற்செய்தியிலும், யோவான் நற்செய்தியிலும் வானதூதர்கள் வெளிப்படுத்துகிறார்கள். வானதூதர்கள் வழியாக உயிர்ப்பு வெளிப்படுத்தப்படுகிறது. எவ்வாறு இயேசுவின் பிறப்பு வானதூதர்கள் வழியாக மரியாவுக்கு வெளிப்படுத்தப்பட்டதோ, அவ்வாறே வானதூதர்கள் இயேசுவின் உயிர்ப்பைப் பற்றி சீடர்களுக்கு வெளிப்படுத்தினார்கள். இயேசுவின் பிறப்பும் உயிர்ப்பும் இறைவனின் செயல் இறைவனின் வெளிப்பாடு. ஆகவே, உயிர்ப்பு என்பது ஒரு வெளிப்பாடு. அது நம்பிக்கையின் மக்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கான வரலாற்று நிகழ்வு கல்லறை வெறுமையாக இருந்தது.

வெறுமையான கல்லறையே இயேசுவின் உயிர்ப்புக்கு முதல் ஆதாரம், அடையாளம். அவருடைய உயிர்ப்புக்கான இரண்டாவது ஆதாரம் சீடர்களிடையே இருந்த மனநிலை மாற்றம். இயேசு இறந்தவுடன் சீடர்கள் பயந்து, அஞ்சி ஓடி ஒளிந்தார்கள். யாரையும் அவர்கள் சந்திக்க விரும்பவில்லை. என்ன செய்வதென்று தெரியாது பதற்றத்தில் தனித்திருந்தார்கள்.

ஆனால் நற்செய்திகள் கூறுவது போல உயிர்த்த இயேசுவின் அனுபவம் பெற்ற பிறகு அவர்கள் பதுங்கியிருந்த வீட்டை விட்டு வெளியேறி மக்களைச் சந்திக்கிறார்கள் மக்களிடம் போதிக்கிறார்கள்.அதிகாரிகளையும் அரசியல் மதத் தலைவர்களையும் எதிர்கொண்டு சந்தித்து இயேசு உயிர்த்து விட்டார் என்று போதிக்கிறார்கள், உதாரணமாக, லூக்கா நற்செய்தி 24ம் அதிகாரத்தில் எம்மாவுஸ் என்ற ஊருக்கு இரண்டு சீடர்கள் நடந்து சென்றிருக்கிறார்கள். ஒருவர் மற்றவரிடம் தங்களுடைய வாழ்வின் தோல்விகளையும் துக்கங்களையும் வெளிப்படுத்திக் கொண்டு முகவாட்டத்தோடு சென்றார்கள். இயேசு அவர்களை சந்திக்கிறார், அவர்களோடு உடன் பயணிக்கிறார். அவர்கள் அவர்கள் வீட்டில் இரவு உணவின் போது சீடர்கள் உயிர்த்த இயேசு அனுபவம் பெறுகிறார்கள். அந்நேரமே அவர்கள் புறப்பட்டு எருசலேம் சென்று இயேசு உயிர்த்து விட்டார் என்று அறிக்கையிடுகிறார்கள்.

அதேபோல் யோவான் நற்செய்தியிலும் இயேசு சீடர்களுக்குத் தோன்றுகிறார். அதிலும் சிறப்பாக திருத்தூதர் தோமா பெற்ற அனுபவம் உன்னதமானது. உயிர்த்த இயேசுவைக் கண்ட தோமா ஷஎன் ஆண்டவரே என் தேவனே என்று அறிக்கையிட்டு அதே உண்மையை உலகறியச் செய்கிறார். யோவான் நற்செய்தி 21ம் அதிகாரத்திலும் சீடர்கள் மீன் பிடித்து கொண்டிருக்கும் பொழுது அங்கு கடற்கரை ஓரத்தில் அவர்களுக்கு காட்சி கொடுக்கிறார். இதையே பவுலடிகளார் இரத்தின சுருக்கமாக கூறுகிறார். உயிர்த்த இயேசு கேபாவுக்கும் அதன் பின் பன்னிருவருக்கும் தோன்றினார். பின்பு ஐந்நூறுக்கும் மேற்பட்ட சகோதர சகோதரிகளுக்கு ஒரே நேரத்தில் தோன்றினார். அவர்களுள் பலர் இன்னமும் உயிரோடு இருக்கின்றனர். சிலர் இறந்து விட்டனர். பிறகு யாக்கோபுக்கும் அதன் பின் திருத்தூதர் அனைவருக்கும் தோன்றினார். எல்லாருக்கும் கடைசியில் காலம் தப்பி பிறந்த குழந்தை போன்ற எனக்கும் தோன்றினார் (1கொரி 15:5~8) ஆக, உயிர்த்த இயேசு சீடர்களுக்குத் தோன்றி தன் உயிர்ப்பு அனுபவத்தை அவர்களோடு பகிர்ந்து அவர்களைத் திடப்படுத்தினார். உறுதிப்படுத்தினார். பயங்களை நீக்கினார், இறையாட்சிப் பணிக்கு அவர்களைப் பணித்தார். சீடர்களும் வெளிப்படையாக அதை அறிவித்தார்கள்.

இயேசுவின் உயிர்ப்பைப் பற்றிய மூன்றாவது ஆதாரமாக நாம் பார்ப்பது சீடர்களுடைய எண்ணிக்கையில் வளர்ச்சியும் அதிகரிப்பும் திருத்தூதர் பணி 2:41 ல் அவருடைய வார்த்தையை கேட்டவர்கள் திருமுழுக்குப் பெற்றார்கள். அன்று ஏறக்குறைய மூவாயிரம் பேர் அவர்களோடு சேர்ந்தனர். மேலும் மறுவாரம் அவருடைய போதனையைக் கேட்டு அவர்களோடு சேர்ந்த சீடர்களுடைய எண்ணிக்கை ஐயாயிரம் ஆயிற்று (திப 4: 4) இதைத்தான் திருத்தூதர் பணி ஆசிரியர் கூறுகிறார். ஆண்டவரும் தான் மீட்டுக் கொண்டவர்களை நாள்தோறும் அவரோடு சேர்த்துக் கொண்டேயிருந்தார் (திப 2:47)

**இந்த நான்கு ஆதாரங்களும்**
**கல்லறை வெறுமையாக இருத்தல்**
**சீடர்களை சந்தித்தல்**
**திருத்தூதர்களின் மனநிலை மாற்றம்**
**சீடர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு**



இறந்த இயேசுவுக்கு ஏதோ நடந்திருந்தது, அது முன் கூறிய ஆதாரங்களுக்கு விளக்கங்களாக அமைந்திருந்ததை சுட்டிக் காட்டுகிறது. அந்த நிகழ்வைத்தான் இயேசு உயிர்த்தார் எனக் கூறுகின்றோம். இறந்த இயேசு உயிர்த்தார் என்பது ஒரு அனுபவ நிகழ்வு. இந்த நிகழ்வைத் தான் நம் ஒவ்வொரு ஆண்டும் பாஸ்கா பெருவிழாவின் போது கொண்டாடுகின்றோம். நாம் ஒவ்வொருவரும் பாஸ்கா பெருவிழாவின் மக்களாக வாழ வேண்டுமென்று திருத்தந்தை தூய இரண்டாம் யோவான் பவுலும், தற்போதைய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் அழைக்கின்றார்கள். உயிர்த்த அனுபவம் பெற்ற சீடர்களைப் போல நாமும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். அந்த உயிர்ப்பின் மகிழ்ச்சியை அறிக்கையிடவும் வேண்டும். இந்த உயிர்ப்பு அனுபவம் இயேசுவில் தான் உண்டு. ஏனெனில் இயேசு கூறுகிறார். உயிர்த்தெழுதல் நானே(யோவா 11:25)

# தூய யோசேப் வாஸ் ஆண்டு





**கத்தோலிக்கரை இனம் காண்பதில் சிக்கல்:**

- 'ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்கர் துன்புறுத்தலுக்குப் பயந்து கிறிஸ்தவ அடையாளங்களை பகிரங்கமாக வைத்திருக்கவில்லை.
- இதனால் கத்தோலிக்கரை இரகசியமாக இனம் காண்பது தூய வாஸ் முனிவருக்குக் கடினமாகியது.
- தூயவாஸ் கத்தோலிக்கரை இனம்காண வேண்டும். கத்தோலிக்கரும் இவரை ஒரு குருவானவர் என அறிந்துகொள்ள வேண்டும்.

**தூய வாஸ் காட்டிய வெளியடையாளங்கள்:**

- 'தூய வாஸ் தன் கழுத்தில் பெரிய செபமாலையை அணிந்திருந்தார்.
'தூய வாஸ் தனக்கு உதவிய மக்களுக்கு முன்பாக
- நன்றியுணர்வோடு சிலுவையடையாளம் வரைந்தார். 'கத்தோலிக்கர் மட்டும் புரிந்துகொள்ளும் வண்ணம்
- கத்தோலிக்க அடையாள வார்த்தைகளைப் பயன்படுத்தினார்.

**அவரது தனிப்பட்ட சான்றுகள்:**

- வசதிகளை எதிர்பார்க்கவில்லை. இவர் பாதணிகள் இல்லாமல் பாதையில்லாத காட்டுவெளி, ஆபத்தான ஆறுகள் என்று பார்க்காமல் மக்களைத் தேடி இலங்கை முழுவதும் பயணித்தார்.
- துணிந்து அடைக்கலம் தந்த கத்தோலிக்கரின் இல்லங்களில் தங்கி அப் பகுதியில் வாழ்ந்த கத்தோலிக்கருக்கு திருப்பலி மற்றும் திருவருட்சாதனங்களை நிறைவேற்றினார்.
- சில இடங்களில் பிச்சைக்காரனைப் போல பகலில் பிச்சையெடுத்தும் கத்தோலிக்கரை இனம் கண்டார். பின் இரவு வேளைகளில் அவர்களுக்கு திருப்பலியும் நற்கருணையும் கொடுத்தார்.
- தேவையேற்பட்ட போது இறைவனிடம் உருக்கமாகச் செபித்துப் புதுமைகள் மூலமாக நன்மைகள் செய்து கத்தோலிக்கரினதும் பிற மதத்தவரினதும் நம்பிக்கையை வலுவூட்டினார்.

**அடுத்தவர் அவரை அறிந்த விதம்:**

- புனிதரின் தூய்மையும் ஏழ்மையும் நிறைந்த வாழ்வு சாதாரண கிறிஸ்தவர் தொடக்கம் கண்டி அரசரையும் பெரிதும் கவர்ந்தது.
- கண்டி அரசன் புனிதரை ஒரு ஒற்றனாகச் சந்தேகித்துச் சிறைப்பிடித்தாலும் புனிதரின் பணி, ஏழ்மை, எளிமையைப் பார்த்து அவரில் இரக்கம் கொண்டான்.
- சாதாரண கத்தோலிக்கர், ஒல்லாந்தரிடம் நன்மதிப்புப் பெற்ற கத்தோலிக்க மூப்பர்கள், அரச அதிகாரிகள், அரசர்கள் என்று யாரையும் பண்போடும், பணிவோடும் அணுகினார்.

**ஏனைய குருக்களோடு திட்டமிடல்:**

- 1705 புரட்டாதி 9ம் நாள் ஏனைய குருக்களோடு கலந்தாலோசித்து இலங்கையை எட்டுப் பணிப் பிரிவுகளாகப் பிரித்து செயல்படப் பணித்தார்.
- அருட்திரு கொன்சால்வேஸ் அடிகளின் பன்மொழிப் புலமையை அறிந்து அவரை உற்சாகப்படுத்தினார். இன்று தவக்காலத்தில் பாடப்படும் பசாம் எனும் வியாகுலப் பிரசங்கம் அருட்திரு கொன்சால்வேஸ் அடிகளின் உருவாக்கமே.

**புனிதரின் மறைத்தூது வழிமுறைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய யோசேப் வாஸ்

**எமது நாட்டின் திருத்தூதரான தூய யோசேப்வாஸ் ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காதவை இன்று எம் நாட்டில் கத்தோலிக்க திருச்சபை நிலைத்து நிற்கின்றது என்றால் அதற்கு காரணம் தூய யோசேப் வாஸ் ஆவார். எனவே அவர் பற்றியும் அவரது பணி பற்றியும் அறிந்துகொள்ள வேண்டியது நமது கடமையாகும். இம்மாதம் அவரோடு இலங்கையில் பணிபுரிந்த சில குருக்கள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்வோம்.**

### 1. அருட்பணி பாஸ்கல் டொ கொஸ்டா ஜெரேமியாஸ்

இவர் கோவாவைச் சேர்ந்தவர். ஆரம்ப காலத்தில் மறைமாவட்டக் குருவாக இருந்த இவர் துறவற சபை ஒன்றில் இணைய விரும்பினார். எனினும் இந்தியர்கள் எவரையும் துறவற வாழ்வுக்கு எந்த ஒரு சபையும் ஏற்றுக் கொள்ளாததால் இவர் தன்னுடைய இரு நண்பர்களுடன் இணைந்து கோவாவின் போவா விஸ்டா (Boa vista) எனும் மலை உச்சியில் அமைந்துள்ள அற்புதச் சிலுவை ஆலயத்தில் ஒரு சிறு குழுவாகத் துறவற வாழ்வை ஆரம்பித்தார். பிற்காலத்தில் தூய யோசேப் வாஸ் இக்குழுவில் இணைந்து முறைப்படி இதனை ஒரு தியான சம்பிரதாய சபையாக உருவாக்கினார். இதுவே **ஒறற்றோரியன் சபையாகும்.** பிற்காலத்தில் இச்சபையே இலங்கையின் மறைபணிக்குப் பொறுப்பாக இருந்தது.

### 2. ஒரு கோவா மறைமாவட்டக் குரு

தூய யோசேப் வாசினுடைய பணி ஆரம்பத்தில் அவருடைய பணியின் சிறப்பை அறிந்த கோவா மறைமாவட்டக் குரு ஒருவர் அவருக்கு உதவியாக வந்து சேர்ந்தார். சிறிது காலம் இலங்கையின் வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் இவர் பணிபுரிந்தார். எனினும் சிறிது காலத்தின் பின் சுகயீனம் காரணமாக இவர் கோவாவிற்குத் திரும்பிச் சென்றார். இவரே யோசேப் வாசின் பணிகள் பற்றிய விபரங்களை வெளியுலகிற்கு அறியத்தந்தவர் ஆவார்.

### 3. அருட்பணி ஜோசப் கார்வால்கோ

இவர் தூய யோசேப் வாசின் சகோதரியின் மகனாவார். இவர் சங்குவாலே கிராமத்தை சேர்ந்தவர். இவர் தூய யோசேப் வாசினுடைய மாணவனாக இருந்தவர். 1691ல் இவர் ஒறற்றோரியன் சபையில் இணைந்தார். இலங்கைக்கு தூய யோசேப் வாசின் பணியில் உதவியாக அனுப்பப்பட்ட முதலாவது குழுவில் இவரும் ஒருவர். முற்காலத்தில் கனாராவில் தூய யோசேப் வாசின் பணிக்கு உதவி செய்தவர். 1697ல் புத்தளம் துறைமுகத்தில் தூய யோசேப் வாஸ் இவர்களை வரவேற்றார். கண்டி நகரில் இவர் தூய யோசேப் வாசுடன் இணைந்து 1697ல் கொள்ளை நோய் பரவிய காலத்தில் சிறப்பாகப் பணிபுரிந்தார். இறுதியில் கண்டியில் சுகவீனமுற்று 22 யூலை 1702ல் மரணமானார். **இவரே இலங்கையில் மரணமடைந்த முதலாவது ஒறற்றோரியன் சபை குரு ஆவார்.**

### 4. அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ்



இலங்கைக்கு தூய யோசேப் வாசின் பணியில் உதவியாக அனுப்பப்பட்ட மூன்றாவது குழுவில் இவரும் ஒருவர். மொழிப் புலமை மிக்கவரான இவர் தமிழ், சிங்கள மொழிகளில் பக்தி இலக்கியங்கள் உருவாகக் காரணமாக இருந்தவர். இலங்கையில் பணிபுரிந்த ஒறற்றோரியன் சபையினருக்குத் தலைவராக சிறிது காலம் இவர் இருந்தார். **இலங்கை சிங்கள கத்தோலிக்க இலக்கியத்தின் தந்தை என இவர் கருதப்படுகின்றார்.** இவருடைய கல்லறை இன்றும் போளவத்தை பிரதேசத்தில் காணப்படுகின்றது. இலங்கை மாதா தேசிய குருமடத்தின் சிங்கள மொழிக் கழகம் இவரைத் தனது பாதுகாவலராகக் கொண்டுள்ளது.



### 5. அருட்பணி மைக்கல் டி மெல்லோ



இலங்கைக்கு தூய யோசேப் வாசின் பணியில் உதவியாக அனுப்பப்பட்ட மூன்றாவது குழுவில் இவரும் ஒருவர். திருச்சபையில் பதவி உயர்வு, எதிர்பார்ப்புகளைக் கைவிடும்படி அற்புதமாகத் தூண்டப்பட்ட இவர் ஒறற்றோரியன் சபையில் இணைந்து கொண்டார். இலங்கைப் பணிக்காக விண்ணப்பித்து அனுமதி பெற்றுக் கொண்டார். கடுமையான கால்நடையான பயணத்தின் பின்னர் தென்னிந்தியாவிலிருந்து படகு மூலம் இன்னும் மூன்று குருக்களுடன் புத்தளத்தை வந்தடைந்தார். இவர் முதலில் ஏறத்தாழ 7 மாதங்கள் நாரங்கொட பகுதியில் சிறப்பாக மறைப்பணியாற்றினார். அங்கிருந்து எமது மறைமாவட்டத்திலுள்ள மூதூரில் மறைப்பணியாற்றத் தூய யோசேப் வாஸ் மற்றும் அருட்பணி கொன்சால்வேஸ் அடிகளாருடன் 24.03.1706 அன்று இம்மண்ணுக்கு வந்து சேர்ந்தார். சடுதியாக நோயுற்று மறுநாள் (மங்கள வார்த்தைத் திருநாள்) தூய யோசேப் வாசினால் நோயிற் பூசுதலும் நற்கருணையும் கொடுக்கப்பட்டு கைகளில் சிலுவையை அணைத்துக் கொண்டு மூவேளை செபத்திற்கான மணி ஒலித்த போது உயிர் நீத்தார். **இலங்கையில் உள்ள மிகப்பழமையான ஒறற்றோரியன் கல்லறை இதுவாகும்.**

### 6. அருட்பணி பெத்ரோ டோ சல்தான்கா

செல்வந்தரான இவர் தனது சொத்துக்களை விட்டு ஒறற்றோரியன் சபையில் இணைந்தார். 03.02.1703ல் கோவாவிலிருந்து இலங்கைக்கான பயணத்தை ஆர்பித்தார். 1703ன் இறுதியில் புத்தளத்தை வந்தடைந்தார். மரணமடைந்த அருட்பணி யோசேப் கார்வால்கோ வின் இடத்தை நிரப்பத் தூய யோசேப் வாசுடன் 27.12.1703ல் கண்டிக்குச் சென்றார். கண்டியில் அதிக காலம் பணிபுரிந்தார். தனது கடிதத்தில் பிரெஞ்சுக்காரர் கண்டியில் எவ்வித பிரச்சனைகளுமின்றி வசிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். தூய யோசேப் வாசின் மறைப்பணி விபரங்களை எழுத்து மூலம் கோவாவிற்கு அறியத்தந்தவர் இவராவார்.

### 7. அருட்பணி ஜோசப் டோ மெனசஸ்

இலங்கைக்குத் தூய யோசேப் வாசின் பணியில் உதவியாக அனுப்பப்பட்ட முதலாவது குழுவில் இவரும் ஒருவர். தமிழ் மொழியைச் சிறப்பாக அறிந்திருந்தார். பிற்காலத்தில் ஒறற்றோரியன் சபையினுடைய இலங்கை பணியின் தலைவராக இருந்தவர். இவர் அலம்பில், கொட்டாஞ்சேல், புதுக்குடிச்சாறு, வலிகாமம், பூநகரி, யாழ்பாணம், தீவுக்கூட்டங்கள், தம்பலகாமம், திருகோணமலை, கொட்டியாரம், மட்டக்களப்பு, தமன்கடுவ, தோறகமுனே ஆகிய இடங்களில் பணிபுரிந்தார்.

### 8. அருட்பணி பெத்ரோ பெர்ராவோ

இலங்கைக்குத் தூய யோசேப் வாசின் பணியில் உதவிபுரியக் கொச்சின் மறைமாவட்டத்தைச் சேர்ந்த இக் குருவானவர் தாமாக முன்வந்து இலங்கையை வந்தடைந்தார். கொச்சின் ஆயர் இதற்கான அனுமதியைத் தயக்கத்துடன் வழங்கினார். இவர் மாதோட்டம் பகுதியில் தரையிறங்கினார். இவர் யோசேப் வாசின் அனுமதியோடு சிலேனா மருதமடு, மாதோட்டம், அயல் கிராமங்களில் பணிபுரிந்தார். **மருதமடு அன்னையின் திருதலத்தை கட்டியெழுப்பியவர் இவராவார்.**

### 9. அருட்பணி ஜோசப் டோ ஜேசு மரியா

இலங்கைக்குத் தூய யோசேப் வாசின் பணியில் உதவியாக அனுப்பப்பட்ட நான்காவது குழுவில் இவரும் ஒருவர். வெளி நாடுகளில் வர்த்தகம் புரிந்த செல்வந்தரான இவர் குழந்தைகள் இல்லாததால் தன்னுடைய மனைவியுடன் துறவியானார். இவரது மனைவி அப்பலோனியா பெரேரா புனித மொனிக்கா துறவற மடத்தில் இணைந்தார். ஜோசப் டோ ஜேசு மரியா ஒறற்றோரியன் சபையில் இணைந்தார். தமது சொத்துக்களைத் திருச்சபைக்கு வழங்கினர். இவரது உண்மையான பெயர் யோசேப் வாஸ். துறவற வாழ்வில் ஜோசப் டோ ஜேசு மரியா எனும் பெயரை எடுத்துக்கொண்டார். இவர் இலங்கையின் மேற்குப் பகுதியில் மறைப்பணி புரிந்தார்.

### 10. அருட்பணி மனுவேல் டி மிராண்டா

இலங்கைக்குத் தூய யோசேப் வாசின் பணியில் உதவியாக அனுப்பப்பட்ட நான்காவது குழுவில் இவரும் ஒருவர். இவரது சிறப்பான பணி காரணமாக இவர் மீண்டும் கோவாவிற்கு 1712ல் திருப்பி அழைக்கப்பட்டார். அங்கு சபையின் உயர் தலைவராக இவர் தெரிவு செய்யப்பட்டார். இவரைப்பற்றிய தகவல்கள் மிக அரிதாக உள்ளன. இவர் மேற்கு மற்றும் தெற்கு கரைப் பகுதியில் சிறப்பாக நீர்கொழும்பு முதல் மாத்தறை வரையான பகுதிகளில் பணி புரிந்தார்.

### 11. அருட்பணி பிரான்சிஸ்கோ டோ யேசு


இலங்கைக்கு தூய யோசேப் வாசின் பணியில் உதவியாக வந்த இவர் கற்பிட்டி தீபகற்பத்தில் பணிபுரிந்தார். ( குருவிக் குளம், குயில்முவலி, கல்கமுவ, நாவற்காடு, ஆண்டியூர், கட்டைக்காடு, மாம்புரி, அரசடி)

### 12. தென்னிந்திய இயேசு சபைக் குருக்கள்

கோவாவிலிருந்து தூய யோசேப் வாஸ் இலங்கை நோக்கிய பயணத்தை ஆரம்பித்த போது இலங்கையில் பயன்பாட்டிலிருந்த சிங்கள, தமிழ் மொழிகளை அவர் அறிந்திருக்கவில்லை. அதே போல பயணத்திற்கான வழிகளையும் அவர் அறிந்திருக்கவில்லை. தென்னிந்தியாவுக்கு அவர் வந்த போது இயேசு சபையினர் அவரது நோக்கத்தை அறிந்து, அவரை வரவேற்று, தங்களுடைய இல்லத்தில் சிறிது காலம் தங்க வாய்ப்பளித்தனர். இக்காலத்தில் அவர் இயேசு சபைக் குருக்களிடமிருந்து தமிழ் மொழியைக் கற்றுக்கொண்டார். அதே போல பயணத்திற்கான வழிகளை அவர்கள் ஏற்பாடு செய்து கொடுத்தனர். இதன் பின்பே அவர் இலங்கை நோக்கிப் புறப்பட்டார்.

இலங்கைக்கு வந்த அனைத்து ஒறற்றோரியன் சபைக் குருக்களும் இவ்வாறே இயேசு சபையினரால் மெருகூட்டப்பட்டு இலங்கைக்கு அனுப்பப்பட்டனர். முக்கியமாக அருட்பணி மனுவேல் பெரேய்ரா SJ தமிழ் மொழி கற்றுக் கொடுப்பதில் முன்னின்று உழைத்தார்.






**இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள சில ஒற்றோரியன் சபை குருக்களின் கையெழுத்து**

**இலங்கையின் திருத்தூதரான தூய யோசேப் வாஸ் முனிவரே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்!**

**அருட்பணி. எஸ். ஆர். ஜெயரெட்ணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூயமத்தேயு நற்செய்தி ஆண்டில் "நற்செய்தியை அறிவோம்"

**சென்ற இதழின் தொடர்ச்சி**

**ஆராய்வோம்!! அறிவோம்!!!**

சிறுகேள்வி:~ 12 அப்போஸ்தலர்கள் இருக்க ஏன் மத்தேயுவோடு, மத்தேயு நற்செய்தி இணைத்துப் பேசப்பட்டது அல்லது நம்பப்பட்டது. வேறு முக்கியமான ஒருவரோடு தொடர்புபடுத்திப் பேசப்பட்டிருக்கலாமே?

விடைகள்:~

அ) 12 அப்போஸ்தலர்களில், யூதாஸ்கரியோத்து பணத்திற்கு பொறுப்பாளியாய் இருந்துள்ளான் எனநற்செய்தியிலிருந்து அறிகிறோம். (யோவான் 12:6) ஏனையவர்களில் பொறுப்புக்கள் குறிப்பிட்டு நற்செய்தியில் எழுதப்படவில்லை.

ஆ) ஆனாலும் 12 அப்போஸ்தலர்களிலும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களில் வரி வசூலிக்கும் மத்தேயு இருந்திருக்க அதிக வாய்ப்புக்கள் உண்டு. காரணம் வரி வசூலிப்பவர்கள் கணக்குகளை பிழை இல்லாமல் எழுதி வைக்க வேண்டியவர்கள். அந்த வகையில் மத்தேயு வரி வசூலிப்பவராக இருந்து . இயேசுவால் அழைக்கப்பட்டவர், கவனம் செலுத்தி நுணுக்கமாக பதிவுகளை செய்யக்கூடியவர் என்ற முடிவுக்கு வரலாம்.

இ) அடுத்ததாக மற்ற அப்போஸ்தலர்கள் அநேகமாக்க அதிக வாய்ப்புக்கள்னோர் மீனவர்களாக இருந்தபடியினால் யூதாஸ் பண விடயங்களை கவனித்து கொண்டது போலவே, மத்தேயுவும். (பழைய ஏற்பாட்டில் எரேமியா இறைவாக்கினரின் பணிகளைப் பாருக்க எழுதிக் கொண்டிருந்தது போல எரேமி.36:4) இயேசுவின் பணிக்காலங்களில் இயேசுவின் பணிகுறித்த ஒரு சில பதிவுகளை குறித்து வைத்திருக்க அதிக வாய்ப்புக்கள் உண்டு.

ஈ) இந்த வகையில் தூய மத்தேயுநற்செய்தி மற்றவர்களைவிட மத்தேயு அப்போஸ்தலரோடு இணைத்துப் பேசப்பட்டது ஓரளவிற்கு நியாயமானது தான். ஆகையினால் முழு நற்செய்தியும் இல்லை என்றாலும், தூய மத்தேயு நற்செய்தியில் ஒரு சில சிறு எழுத்துப்பகுதிகளாவது நேரடியாகவே தூய மத்தேயு அப்போஸ்தலருக்கு சொந்தமானதாக இருக்க வாய்ப்புக்கள் உண்டு.

உ) ஆகையினாலே மத்தேயு அப்போஸ்தலன் மற்ற மீனவ அப்போஸ்தலர்களைவிட
~ எழுதும் திறன் உள்ளவர்.
~ குறிப்பு எடுக்கும் பழக்கம் உள்ளவர்.
~ நுணுக்கமாக வேலை செய்யும் திறன் உள்ளவர்.
~ அதிக அவதானம் கொண்டவர் என்றெல்லாம் முடிவுகளுக்கு வரலாம்.

ஊ) இதனடிப்படையில் மத்தேயு நற்செய்தியின் முழுப்பகுதியும் இல்லையென்றாலும் ஒரு சில சிறு இயேசுவைக்குறித்த எழுத்துப் பதிவுகள் அப்போஸ்தலர் மத்தேயுவுக்கு சொந்தமானது, எனும் முடிவுக்கு எவ்வித ஐயமுமின்று கூறலாம்.!!!

எ) இந்த விவாதத்தின் அல்லது ஊகிப்பின் அடிப்படையில் ஆதித் திருச்சபையும் ஆரம்பகால வேத நூலாசிரியர்களும் தூய மத்தேயு நற்செய்தியை – மத்தேயு எனும் அப்போஸ்தலரோடு சம்பந்தப்படுகிறது யோசிக்க ~ வாசிக்க தூண்டப்பட்டிருக்கலாம் ...

**அருட்பணி பி. போல்றொபின்சன்**

## மகிழ்ச்சி... மகிழ்ச்சி... மகிழ்ச்சி...
## குடும்பங்களின் அன்பின் மகிழ்வு திருஅவையின் (திருச்சபை) மகிழ்வாகும் திருத்தந்தை பிரான்சிஸ்

மகிழ்ச்சி இறை பிரசன்னத்தின் வெளிப்பாடு. அன்பின் நிறைவே மகிழ்ச்சியின் வெளிப்பாடு. மனித முயற்சிகள் எல்லாம் இந்த மகிழ்ச்சியை அடையும் நோக்கிலேயே நகருகின்றது. வாழும் மனிதன் துன்பத்தை முடிந்தளவு தவிர்த்து இன்பத்தில் மகிழ்ந்திருக்கவே மனிதன் எப்போதும் விரும்புகிறான். இறப்பின் பின் 'மோட்சமா? நரகமா? என்னும் தெரிவை இப்போதே செய்ய முடிந்தால். உறுதியாக மோட்சத்தையே தெரிவுசெய்வான்.

இவ்வாறானகருத்தின் அடிப்படையில் திருத்தந்தைபிரான்சிஸ் 'மகிழ்ச்சி' என்னும் நிறைவை மனிதன் அடிப்படையில் பெறுவதே இறைவனின் நோக்கம் என்பதை தனது திருத்தூதுப் பணிகளின் ஆரம்பத்திலேயே நன்கு அறிந்திருந்தார். திருத்தந்தையின் 2வது திருத்தூது மடலை 'நற்செய்தியின் மகிழ்ச்சி' என்னும் தலைப்பில் வெளியிட்டு, மகிழ்ச்சி என்னும் பண்பு இறைசாட்சியத்தின் வெளிப்பாடு என்று கூற தயங்கவில்லை.

**திருமணமத்தின் சிறப்புகள்**

தொடக்க நூலில் "கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார், கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார், ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்" (தொ.நூ.1:29) என்பதை அடிப்படையாக கொண்டு "இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான், இருவரும் ஒரே உடலாய் இருப்பர்" (தொ.நூ.2:24) என்னும் உன்னதமான குடும்ப மாண்பினை திருவிவிலியத்தின் அடிப்படையில் காணக்கூடியதாக உள்ளது.

"கடவுளின் உரு" என்பது மணத்துணைவர்களாகிய "ஆணையும் பெண்ணையும்" குறிப்பிடுகின்றது. இயேசு தம் போதனையில் விவாகரத்து பற்றிய சர்ச்சைக்கு தீர்வாக "படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள் 'ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்' என்று நீங்கள் வாசித்ததில்லையா?" (மத்.19:4) என்பதை மேற்கோள் காட்டி, "எனவே கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்" (மத்.19:5) என்று மீள்நிலை நிறுத்துகின்றார்.

**திருமணத்தின் இரு இயல்புகள்:**

இந்த திருவிவிலியத்தின் அடிப்படையில், திருமணத்தின் இரு இயல்புகள் மிகத் தெளிவாக வெளிப்படுகின்றது. அவை

1. ஒருமைத்தன்மை: ஒரு ஆணுக்கும், ஒருபெண்ணுக்கும் இடையே உள்ளஅன்பின் பிணைப்பு
2. கட்டவிலாமை: மரணம் வரை நிலைக்கும் நிரந்தர உறவு. திருத்தந்தை பிரான்சிஸ் **"அன்பின் மகிழ்ச்சி"** என்னும் திருமண அன்பைப் பற்றிய ஊக்கவுரையில் திருமண அன்பை **"படைத்தவரும் மீட்பருமாகிய கடவுளை வெளிப்படுத்தும் உண்மையான உயிருள்ள உருவ ஓவியம் ஆவர்" (அ.ம.11) விளக்குகின்றார்.**

**திருமணத்தின் இரு பயன்கள் அல்லது நோக்கங்கள்:**

1. மணத்துணைவரிடையிலான நல்வாழ்விற்கான அன்புறவு
2. மணத்துணைவர்களின் மகப்பேறுடைமை

எனவே மகப்பேறளிக்கும் அன்புறவை திருத்தந்தைபிரான்சிஸ் "கடவுளுடைய அக வாழ்வின் ஓர் அடையாளமாக மாறுகின்றது" என்பதன் வழியாக மூவொரு கடவுளின் அன்புறவு மிகப் பொருத்தமான உருவெடுக்கும் ஒரு வெளிப்பாடாக விளக்குகிறார். கடவுள் தந்தை, கிறிஸ்து மகன், அன்பின் ஆவியார் என்னும் உறவு ஒன்றிப்பின் பிரதிபலிப்பாக ஒவ்வொரு குடும்பமும் தந்தை கணவன், தாய் மனைவி, அன்பின் பிள்ளைகள் என கடவுளின் உள்ளியழ்பை வெளிபடுத்தி நிற்கின்றது.

திருமணத்தில் தம் மணத்துணைவரின் இயல்பை கூறவிளையும் திருத்தந்தை, தொடக்க நூலில் காணும் கடவுளின் மனிதனுக்கு படைக்கப்பட்ட விலங்குகள், பறவைகள், இயற்கை அனைத்திலும் "தனக்குத் தகுந்த துணையை" (தொ.நூ.2:18,20) ஆர்வத்துடன் தேடும் அக்கறையுள்ள தந்தையாக விபரிக்கின்றார். மூவொரு உறவின் பிணைப்பில் வாழும் கடவுள் தன் படைப்பின் சிகரமான மனிதனும் உறவின் பிணைப்பில் வாழும் ஆசீரை வழங்க தவறவில்லை. கணவன் மனைவி ஒன்றிப்பை 'ஒன்றித்திரு' அல்லது 'பற்றிக்கொண்டிரு' என்ற எபிரேயமொழி, மூலச்சொல்லின் வடிவமாகிய 'உடலும் உள்ளமும் நெருக்கமாக' இருப்பது போன்ற ஆழ்ந்த இணக்கத்தை எடுத்துரைக்கின்றது.

**அருட்பணி. ஜீட் ஜோன்சன்**

தொடரும்....




# தூய மத்தேயு ஆண்டு



**மத்தேயு நற்செய்தியும் இயேசுவின் திருப்பாடுகளும்**

- மத்தேயு இறைவாக்கு நூல்களுக்கு விளக்கம் கொடுப்பவர். பழைய ஏற்பாட்டு இறைவாக்குகளை இயேசுவின் வாழ்வோடு ஒப்பிட்டுக் காட்டுகின்றார். "என்று இறைவாக்கினர் எரேமியா உரைத்தது அப்பொழுது நிறைவேறியது" (மத் 27: 10).
- ' யூதாசின் தற்கொலை பற்றி மத்தேயு மட்டுமே குறிப்பிடுகின்றார். தன் நண்பரைக் காட்டிக் கொடுத்ததை நினைத்தும், அவரை விடுவிக்க முடியாத தனது இயலாமையை நினைத்தும் யூதாசு விரக்தியில் தற்கொலை செய்து கொண்டான் (மத் 27: 5).
- மத்தேயுவில் இயேசுவிற்கு கருஞ்சிவப்பு நிறமுள்ள அங்கியை அவருக்கு அணிவித்தனர் எனவும் வலக்கையில் ஒருகோலைக் கொடுத்தனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. கருஞ்சிவப்பு நிறமுள்ள அங்கியும் கோலும் அரசருக்குரிய அடையாளங்கள். இங்கு இயேசுவை 'யூதரின் அரசரே வாழ்க!' என்று படைப்பிரிவினர் ஏளனம் செய்தனர் (மத் 27: 28~29).



- பிலாத்துவின் மனைவி கனவு கண்டு பிலாத்துவை எச்சரித்ததும் பிலாத்து கைகளைக் கழுவியதும் மத்தேயு நற்செய்தியில் நாம் காண்கிறோம். கனவுகள் இறை வெளிப்பாட்டின் அடையாளங்கள் (மத் 27: 19, 24).
- இயேசு இறந்த போது நிலநடுக்கம், பாறைகள் பிழந்தது, கல்லறைகள் திறந்தது, இறந்த இறைமக்கள் பலரின் உடல்கள் உயிருடன் எழுப்பப்பட்டது போன்ற சம்பவங்கள் மத்தேயு நற்செய்தியில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன (மத் 27: 51~52).
- மத்தேயு நற்செய்தியில் குறிப்பிடப்படும் இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட கள்வர்களில் மனமாற்றம் இருக்கவில்லை (மத் 27: 44).
- இயேசுவின் இறப்பு நிகழ்ச்சிகளைக் கண்ட உரோமைய நூற்றுவர் தலைவரும் காவல் காத்தவர்களும் இவர் உண்மையாகவே இறைமகன் என்றார்கள், இயேசுவை விசுவசித்து பின் சென்ற ஒரு சீடர் அல்ல. சிலுவையடியில் இதுவே முதலாவது விசுவாச சாட்சியமாகும் (மத் 27: 54).
- இயேசுவின் உடலைக் கல்லறையிலிருந்து யாரும் திருடக் கூடாது என்பதற்காக காவல் வீரர்கள் நிறுத்தி வைக்கப்பட்டார்கள் (மத் 27: 65,66).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2017ம் ஆண்டிலிருந்து மறையாசிரியர் தேர்வுகளில் பெயர் மாற்றம்

தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தினால் வருடந்தோறும் நடாத்தப்படுகின்ற மறையாசிரியர் பரீட்சைகளின் பெயர்கள் இவ்வாண்டிலிருந்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். அதன்படி,

| முன்னைய பெயர் | தற்போதைய பெயர் |
|---|---|
| மறையாசிரியர் தேர்வு | மறையாசிரியர் முதல் தேர்வு |
| மறையாசிரியர் சிறப்புத் தேர்வு | மறையாசிரியர் இடைநிலைத் தேர்வு |
| மறையாசிரியர் கௌரவப்பட்டத் தேர்வு | மறையாசிரியர் இறுதித் தேர்வு |

மறையாசிரியர் இடைநிலைத் தேர்வுக்குத் தோற்றுவதாயின், ஏற்கனவே நடைமுறையிலிருந்ததைப்போன்று பரீட்சார்த்தி (மறையாசிரியர்) மறைப்பாடசாலையிலே கட்டாயம் கற்பிக்க வேண்டும். இது, மறையாசிரியரின் பயிற்சியை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதோடு தொடர்ந்தும் செயற்படுத்தப்பட வேண்டுமென ஆயர் மன்றம் தீர்மானித்துள்ளது.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் 2015ம் ஆண்டிலிருந்து நடாத்தப்படும் மறையாசிரியர் சான்றிதழ் தேர்வு அதே பெயரில் நடாத்தப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

2017ம் ஆண்டிலிருந்து மறையாசிரியர் தேர்வுகளுக்குத் தற்போதைய பெயர்கள் பயன்படுத்தப்படும்.

**அருட்சகோதரி ரஞ்சி போல்துரை**
**பரீட்சை ஒழுங்கமைப்பாளர்**
**தேசிய மறைக்கல்வி நடுநிலையம்**
**கொழும்பு ~ 08**

## கலைமான்



பாலஸ்தீனத்தின் கலைமான்கள் இன்றும் காணப்படுகின்றன. இவை மிகவும் வேகமாகப் பயணம் செய்பவை. விவிலியத்தில் 2சாமுவேல் 2 : 18இல் வேகமாக ஓடும் கலை மானுடன் அசாவேல் ஒப்பிடப்படுகிறார் (காண் குறி 12:8). இனிமைமிகு பாடல் 2:18 **"என் காதலரே மலை முகட்டுக் கலைமான் போன்று திரும்பிடும்"** என்று குறிப்பிடுகிறது. மேலும் இனிமைமிகு பாடல் நூல் (2 : 7, 4 : 5) அழகிற்கு உருவகமாக கலை மான்களைக் குறிப்பிடுகிறது. மனிதர்களுக்கும் கலைமானின் பெயரைச் சூட்டியதாக விவிலியத்தில் குறிப்புகள் உள்ளன. ஆணாக இருப்பின் சிபியா (2குறி 8 : 9) என்றும், பெண்ணாக இருப்பின் தொற்கா (திப 9 : 36) என்றும் பெயரிட்டனர். கலைமான்களின் மாமிசத்தை உண்ணலாம் என (இ.ச 14:5 கூறுகிறது) ஆகவே அதை வேட்டையாடினர் (1 அர 4:23). ஆனால் பலியில் அதைப் பயன்படுத்துவதில்லை (இச 12 : 5).

## சிலுவையின் பாதையில்

நான் பாவம் செய்த போதும்
என் பாவம் தனைப் போக்க
தன்னையே பலியாக்கினார் இயேசு

சிற்பம் என்னை உருவாக்க
சிற்பியாய் வந்தவரை
சிலுவையில் அறைந்து நாளும் மகிழ்ந்தேனே
உருக்கொடுக்க வந்தவரை
உடனிருந்து மறுதலித்தேன்
ஒளியாக வந்தவரை
ஒருகணமும் நினைந்தேனில்லை
ஒவ்வொரு நாளும் நான் செய்த பாவங்கள்
சிலுவையின் பாதையில் இயேசு சிந்திய இரத்தம்
மாற்றியதே என்வாழ்வை
நியாயத் தீர்ப்பின் பள்ளத்தாக்கினிலே
நியாயம் கேட்டு நிற்கின்றனர் நீதிமான்கள்
நியாயம் தீர்க்க வருவாரே நீதிபதியங்கு

வாழ்வுப் பாதையிலே நான் செய்த பாவம்
அநீதியின் பக்கம் நிறுத்தாமல் காத்திடவே
மனம் வருந்தி மண்டியிட்டு கிடக்கின்றேன்
சிலுவை நாதர் முன்பு
என் சிலுவைப்பாதையிலே அறிந்தும் அறியாமலும்
நான் செய்த பாவம்
ஆண்டவரும் போக்கிடவே வேண்டுகிறேன்

**சு. கௌசல்யா**

## அறியாமை எனும் இருள் நீக்கிய விசுவாச ஒளி தூய யோசப்வாஸ்



அல்லும் பகலும் அமலனின் பணி புரிய
ஆருயிரை ஒப்படைத்து வாழ்ந்த எம் புனிதர்
இருளில் இருந்த எம்மவருக்கு
ஈகையுடன் பணி புரிய ஒளியாய் அமைந்தீரே

உலகின் ஒளியாம் கிறிஸ்துவின் பணியை
ஊக்கமுடன் செய்திட
எம்மிடையே வந்துதித்த எம் புனிதரே
ஏற்றி போற்றுகின்றோம் உம் பணிக்காய்

ஐயம் தவிர்த்து விசுவாச உருக்கொடுக்க
ஒல்லாந்தர் நடுவில்
ஓடம் போல் ஓயாமல் ஓடி
ஔடதமாய் எம் வாழ்வில் அமைந்தீரே

அறியாமை எனும் இருள் நீக்க
ஆண்டவனின் துணை கொண்டு
இறைவாக்கை இயன்றவரை இம் மண்ணில்
ஈதல் நன்று என எண்ணினீரே

உண்மையின் சான்றாய்
ஊனமெனும் அறியாமை நீங்க
எமக்கருள்வாய் உம் வழிகாட்டலை
ஏற்புடையவராய் நாம் வாழ

ஐக்கியம் எம்மில் விருட்சமடைய
ஒற்றுமையை வேற்றுமையில் நாம் காண
ஓயாமல் இறைபணி நாம் செய்ய
ஔடதமாய் திகழும் எம் இறைவா ~ எமை காத்திடுவீர்

**ஆக்கம் :~ அருட்சகோதரர். எமர்சன் றாகல்.**
**மெய்யியல் பீடம், தேசிய குருமடம், கண்டி**

## உயிர்ப்பின் வெற்றியிலே

**அருட்பணி N.C. அருள்வரதன்**



அவமானத்தின்
சின்னமெனப் பெயர் கொண்டசிலுவை
யேசுவின் சிலுவை மரணத்தோடு
வெற்றியின் சின்னமாய் மாறியதே

காறி உமிழ்ந்து
கன்னத்தில் அறைந்தார்கள்
மன்னித்தார்
பொறுத்துக் கொண்டார்
இதனால்
மகத்துவ நிலையினைக் கண்டாரே

யேசுவின் மரணம்
வாழ்வுக்கு வழிகாட்டியது
மனந்திரும்ப அழைக்கும் யேசு
மனங்களின் மாற்றங்களையே
கேட்கின்றார்

பகைமைகளை மறக்கவும்
மன்னித்து
வாழ்வைப் புதுப்பிக்கவும்
வேண்டியோர்க்கு
முடிந்தவரை
உதவிகள் செய்யவும்
தூண்டும் யேசுவின் வார்த்தைகளை
மறவாமல்
வாழ்வோடு இணைக்கும் போது
உயித்த யேசுவே
நம்வாழ்விலும்
உயிர்த்தார் என்பதை
உணர்ந்து கொள்வோமே

# குடும்ப நற்பணிகள் ஆண்டு

இயேசுவின் மனித அவதாரம் ஒரு குடும்பத்தில் நடைபெற்றது. அவர் உலக குடும்பத்தின் மூலம் உலகிற்கு வர விரும்பினார் இயேசு அரசராக, செல்வந்தராக வந்திருக்கலாம். அவர் ஓர் குடும்பத்தில் பிறந்தார்.

**சூசை, மரியா, இயேசு – திருக்குடும்பம்.**

அவர் தெரிவு செய்தது நசரேத்து எனும் ஊர்

**நாசரேத்து:**

- உரோமைப் பேரரசின் தலைநகராகிய உரோமையில் இயேசு பிறந்திருக்கலாம்.
- அவர் வளர்ந்ததோ நாசரேத்து எனும் சிறிய கிராமம்.
- இயேசுவின் காலத்தில் இவ்வூரைப்பற்றி நல்ல பெயர் இருக்கவில்லை.
- இதனால் நத்தனயேல் 'நாசரேத்திலிருந்து நல்லது எதுவும் வரக்கூடுமோ?' (யோவா 1: 46) என்று கூறியிருக்கலாம்.

**30 வருடவாழ்வு நடந்தது என்ன?**

- இயேசு 30 வருடங்கள் என்ன செய்தார்?
- வீண் விரயம் செய்தாரா?
- புதுமைகள், போதனைகள் பற்றி லூக்கா குறிப்பிடவில்லை.
- மக்கள் கூட்டம் அவரைத் தேடி வரவில்லை.
- மாறாக: அனைத்தும் வழமை போலவே நடைபெற்றன.
- இல்லம், சமையல், கல்வி, செபம், விளையாட்டு, உறவு, உதவி, தொழில் என்று சாதாரண வாழ்வு.
- அனைத்தும் ஓர் குடும்ப கட்டமைப்பில் நடைபெற்றன.
- 30 வருடமானாலும் இறைவன் இயேசு இதை விரும்பினார்.
- ஏன்? குடும்பம் முழு மனித வாழ்விற்கு அடிப்படை.



**நாசரேத்தில் திருக்குடும்பம்**

**விவிலியத்திலிருந்து**

- சூசை கனவின் மூலம் வழிநடத்தப்பட்டு மரியாவை ஏற்றுக்கொண்டார்.
- அவர் ஒரு நேர்மையாளர்
- மரியாவை ஏற்றுக் கொண்டு இயேசுவிற்கு சிறந்த வளர்ப்பத் தந்தையாக விளங்கினார்.
- மரியா அழைப்பை ஏற்று ஆண்டவருக்குத் தன்னை அர்ப்பணித்தார்.
- இயேசு: 'அவர் அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்'
- 'மரியா எல்லாவற்றையும் தன் உள்ளத்தில் இருத்தி சிந்தித்து வந்தார்.' (லூக் 2: 19, 52).
- 'இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்துவந்தார்.' (லூக் 2: 52).
- எப்போதும் தன் பெற்றோருக்கும், இறை தந்தைக்கும் கீழ்படிந்து வாழ்வதில் உறுதியாக இருந்தார்.

**'30 வருடங்களாக இயேசு'**

- இயேசு வளர்ந்தார்.
- அவர் ஞானத்திலும் கல்வியிலும் வளர்ந்தார்.
- சிறுவனாக, இளைஞனாக..
- தனது சிறப்பான அழைப்பை உறுதிப்படுத்தி ஆழப்படுத்தினார்.

**ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பமும்**

- சூசை, மரியா போல இயேசுவை வரவேற்க வேண்டும்.
- அவரோடு பேச, செவிமடுக்க, பாதுகாக்க, வளர, பகிர வேண்டும்.
- நாசரேத்து ~ தன்னுள் வைத்திருப்பவள் 'காப்பவள்' எனப் பொருள்படும்.
- இம் மறைபெருளை தாங்கி நிற்கும் ஒவ்வொரு குடும்பமும் அம் மறைபொருளை வாழ்ந்து வருகிறது.
- அதே போல ஒவ்வொரு குடும்பமும் உயிரை மதித்து காப்பதாகவும், கிறிஸ்தவ விழுமியங்களைக் காப்பதாகவும் அமைய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தூய ஜோசேப் வாஸ் அடிகளாரின் ஒரு சில வாழ்க்கைக் குறிப்புகள்

சென்ற இதழின் தொடர்ச்சி....

### 18. போஆ விஸ்டாமலையின் அற்புத திருச்சிலுவை

யோசப்வாஸ் அடிகளார் கோவா நகரிலே ஒறத்தோறியன் சபையின் முதல்வராக இருந்தபோது இச்சிலுவையை கொண்டே செபித்தார் என்பது வரலாறு. கி.பி. 1619இல் இருந்த பழைய கோவா நகரின் அழிவுக்கு முன் இச்சிலுவையில் உயிர்த்த இயேசு ஆண்டவர் காட்சிகொடுத்திருந்தார் இச்சிலுவையின் மூலம் பல புதுமைகள் நிகழ்ந்துள்ளன. அடிகளார் இறைவனின் சாட்சியாக இலங்கைக்கு செல்ல வரமருளுமாறு, நாட்கணக்காக, மணிக்கணக்காக இரவில் நித்திரை மறந்து இச்சிலுவை பாதத்தில் இடைவிடாது செபித்தார்.

### 19. சவுத் பார்

கி.பி.1687 மே மாதம் கூலி வேடம் தரித்து, ஜோசப்வாஸ் அடிகளாரும் அவரது உதவியாளர் ஜோன் என்னும் இளைஞரும் மன்னார் கரையில் சவுத்பார் எனும் இடத்திலேயே தரையிரங்கினார்.

### 20. சவுத் பார் சிலுவை

கி.பி.1687 மே மாதம் கூலிவேடம் தரித்து, ஜோசப்வாஸ் அடிகளார் மன்னார் தரையில் உயிரற்றவர் போல் தரையிரங்கினார். கடற்கொந்தலிப்பு காரணமாக இப் பயணத்திற்கு 20 நாட்கள் எடுத்திருந்தன. உணவின்றி, ஓய்வின்றி பயணம் மேற் கொண்டதால், கடுமையான காய்ச்சலால் பீடிக்கப்பட்டு சவுத்பாரில் தரையிரங்கிய அடிகளாருக்கு முள் குத்தியதால் 20 நாட்கள் இவ்விடத்திலே தங்கியதாக கூறப்படுகின்றது.

### 21. கொழும்புத் துறை

கி.பி.1687 ஆம் ஆண்டு ஜீன் மாதம் மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற ஜோசப் வாஸ் அடிகளார் கொழும்புத் துறைமுகத்ினூடாக யாழ்ப்பாணம் வந்தடைந்தார். ஜோசப் வாஸ் அடிகளாரின் திருச்சுருபம் ஒன்று இன்று கொழும்புத்துறை அருகாமையில் வைக்கப்பட்டுள்ளது.

### 22. சில்லாலை

ஜோசப்வாஸ் அடிகளார் இவ்விடத்திலேயே தமது இரண்டு வருட மறைத் தூதுப்பணியை ஆரம்பித்தார். இதனால் விசுவாத்தில் புத்துணர்வு பெற்று முதற் கிராமம் காணப்படுகின்றது. இந்நாட்டுக்கு கொடிக் கம்பத்தை அறிமுகப்படுத்தியதும், பாலகன் இயேசு அடிகளாரின் கரங்களில் தவழ்ந்ததும் இவ்விடத்திலேயே ஆகும். அவர் மறைந்திருந்து பணிபுரிந்த இல்லத்தில, இதற்கான அடையாளத்தை இன்று காணக்கூடியதாக உள்ளது.

### 23. சில்லாலையிலுள்ள திருச்சிலுவை

ஜோசப்வாஸ் அடிகளார் மறைந்திருந்து பணியாற்றிய இல்லத்துக்கு அண்மையில் வாழ்ந்த குடும்பத் தலைவருக்கு இச்சிலுவை அன்பளிப்பாக கொடுக்கப்பட்டது.

தொடரும்....

## மத்தேயு நற்செய்தி: ஓர் அறிமுகம்



### பழைய ஏற்பாட்டின் மேற்கோள்

மத்தேயு நற்செய்தியில் 60 க்கு மேற்பட்ட பழைய ஏற்பாட்டு மேற்கோள்களை காணமுடியும். இவர் இயேசுவை பழைய ஏற்பாட்டின் நிறைவாகக் காண்கின்றார். சான்றாக (மத் 1:23, 2:18, 13:14, 15:4) எல்லா மேற்கோள்களும் இயேசுவை இறைமகன் என்றும், பழைய ஏற்பாட்டின் நிறைவு என்றும் சுட்டுகின்றன. யூத மறையில் சிறந்த தேர்ச்சி பெற்றவர்என்றும் கிறிஸ்தவ இறையியலின் வல்லுநர் என்பதையும் இது காட்டுகின்றது. ஆங்காங்கே இருந்த மூலங்களை ஒன்றுசேர்த்து தனது நற்சய்தியை மத்தேயு ஒரு புது படைப்பாக மாற்றியிருக்கிறார். வரலாற்றுக்கு சிறப்பிடம் தருவதைவிட இறையியல் மறைபொருள் கருத்துகளுக்கே முன்னிடம் தருகிறார். எனவே இந் நற்செய்தியை படிக்கின்றபோது கிறிஸ்தவ போதனையின் முத்துக்களை கண்டுபிடிப்பது போன்ற உணர்வு ஏற்படுகின்றது. கிறிஸ்துவின் சீடர்கள் எவ்வாறு நெறிமுறைகளை பின்பற்றி திருச்சபையில் அன்புச்சீடர்களாக வாழ வேண்டும் என்பதை தனது போதனையில் வலியுறுத்துகின்றார். நிகழ்ச்சியுரைகளை விட போதனையில் வலியுருத்துகின்றனர். நிகழ்ச்சியுரைகளை விட போதனை-களே மத்தேயு நற்செய்தியை அணிசெய்கின்றன.

### மத்தேயுவின் பார்வையில் இயேசு: மோசே

வரலாற்றில்மையப் புள்ளியாகவும், நாயகனாகவும் விளங்கும் இயேசுவை புதிய ஏற்பாட்டிலுள்ள ஏடுகள் படம் பிடித்துக் காட்டுகின்றன. இந் நூலாசிரியர்கள் இறையியல் கண்ணோட்டத்தோடு இயேசுவின் ஆளுமைத் தன்மை வாழ்வு, விண்ணேற்பு ஆகிய நிகழ்வுகளை எழுதிவைத்துள்ளார். இவர்களில் சிறப்பாக நான்கு நற்செய்தியாளர்களாகிய மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவானும், இயேசுவின் உயிர்ப்புக்குப் பின் திருத்தூதர் குழுமத்தில் சேர்ந்த புனித பவுல் அடியாரும் இயேசுவின் தனித்தன்மையை கோடிட்டுக் காட்டியுள்ளார்கள். மாற்கு இயேசுவை ஓர் நற்செய்தி அறிவிப்பாளராகக் கருதுகிறார். லூக்கா அவரை இறைவாக்கினருக்கெல்லாம் சிறந்ததோர் இறைவாக்கினராகக் கூறுகின்றனர். யோவான் பார்வையில் அவர் தந்தையை வெளிப்படுத்துபவராகத் தோன்றுகிறார். புனிதபவுல் அடியாரின் இறையியல் இயேசுவை ஓர் நற்செய்தி என்று எடுத்துரைக்கிறது. மத்தேயுவோ இயேசுவை ஆண்டவராகிய மெசியாவாகவும், புதிய மோசேயாகவும் கண்ணுறுகின்றார். தனது கண்ணோட்டதை உறுதிப்படுத்த மோசேயின் சட்டத்தை நிறைவு செய்பவராகவும் தபோர் மலையில் புதிய மோசேயாகவும் விளக்கி கூறுகின்றார்.

தொடரும்.........

## விவிலியத்தில் குடும்பம்

**அவன் பாடிய முதல் அது காதல்!** — கவிதை



ஆதித் தொடக்கத்தில் நடந்த முதல் திருமணம் தேவனாலேயே நடத்தப்பட்ட நலம்தரு திருமணம் என்பதை முந்தைய கட்டுரையில் கண்டோம். அந்தத் திருமணத்திற்கான தயாரிப்பாகவே அனைத்துப் படைப்புக்களும் படைக்கப்பட்டன என்பதையும் அக்கட்டுரையில் பார்த்து மகிழ்ந்தோம். ஆனால் அதைவிடச் சுவைமிகு நடையில் அடுத்துத் தரப்பட்டுள்ள இன்னொரு வரைவின் நுணுக்கங்களை ஈண்டு பார்க்க முனைவோம்.

முதல் வரைவின் (தொநூ 1:1-2,4அ) வடிவமைப்பை 'குருகுல' மரபினர் ஆக்கித் தந்துள்ளனர் என விவிலிய வல்லுநர்கள் கூறுவர். அதாவது, மக்களை ஓய்வு நாளன்று இறைதொழுகையில் ஈடுபடுத்தும் நோக்கோடு இறைவன் தம் படைப்புக்களை ஆறு நாட்களில் அடுக்கடுக்காகப் படைத்துவிட்டுப் பிறகு இறுதியில் ஏழாம் நாளன்று அவரே ஓய்வு எடுத்துக் கொண்டார். அவ்வாறே நாமும் வாரத்தின் ஆறு நாட்களிலும் நமக்காகப் பாடுபட்டு உழைத்தாலும் இறுதியில் ஒரு நாளாவது இறைவனிடம் தஞ்சம் புகுந்து தொழுது துதித்து மகிழ வேண்டும் என்று பாடம் புகட்டுவதற்காக எழுதப்பட்ட இலக்கிய வடிவமைப்பு அது!

இறைவனே அனைத்திற்கும் படைப்பாளி! சிறப்பாக மானுடத்து மாண்புக்கும், திருமணச் சிறப்புக்கும் அவரே காரணர் எனும் மாபெரும் உண்மையை 'யாவே' மரபினர் எனும் இன்னொரு மரபினர் வரைந்துள்ள இலக்கிய வடிவமும் உண்டு (தொநூ 2:4 ஆ -3:24) இது எளிய மக்களும் புரிந்துக் கொள்ளக் கூடிய சுவைபட வரையப்பட்டுள்ள எழுத்தோவியம்.

குருகுல மரபில் வகைவகையான படைப்புக்கள் எல்லாமே மானுடத்தின் முதல் திருமணத்திற்கான தயாரிப்புக்கள் என்பது படிப்படியாக அடுக்கடுக்காக அழகுற அமைக்கப்பட்டுள்ளது. அதிலே திருமணத் தம்பதியர் இருவருமே ஒரே கணத்தில் உருவாக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

'யாவே' மரபினரால் எழுதப்பட்ட இந்தப் பகுதியிலும் திருமணம் தான் படைப்பின் உச்ச கட்டமாக முன் வைக்கப்பட்டுள்ளது. ஆனால், முதற்கண் ஆண் மகனை மட்டும் படைத்துவிட்டு அவனைச் சுற்றி அழகுறு தோட்டம், அன்புரு விலங்கினம் இவை அனைத்தும் அவனிடம் அளிக்கப்பட்ட போதும் அவற்றுள் எதுவுமே அவனுக்கு மகிழ்வளிக்கவில்லை. மாறாகத் தனிமை உணர்வும் ஏக்க மனமும் தான் தழும்பி வழிந்தன. அதை ஈடுகட்டும் வகையில் தான் அவனுக்கு இணையான இன்னுயிர் துணைவியை இறைவன் படைத்தார். அதனைக் கண்ட அந்த ஆதி மனிதனும் கவினுரு கவிதை ஒன்றை பாடி மகிழ்ந்தான். அதுவும் காதல் கவிதையாய் அமைந்திருந்தது என்பதை நாம் படிக்கும் போது விவிலியம் குடும்பக் காவியமே எனும் உண்மையை உள்ளங்கையில் நெல்லிக் கனியாய் உணர்கின்றோம். உவகை வெள்ளம் உள்ளத்திினின்று பெருக்கெடுத்து பாய்வதைப் பார்க்கின்றோம்.

இவ்விதமான வரைவுகள் இரண்டும் இரு வேறு வடிவமைப்புக்களைக் கொண்டிருந்தாலும் ஒரே கடவுளைத் தான் மையப் பொருளாகச் சுட்டுகின்றன என்பதைக் காட்டும் முறையில், அவை அமைந்திருக்கின்றன என்பதையும் நாம் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும். முதல் வகை ஆசிரிய மரபினர் அனைத்துப் படைப்புக்களையும் படைத்தவரை 'கடவுள' ('எலோகிம்') என்று குறிப்பிட்டுள்ளனர். அதே சொல்லையே யாவே மரபினரும் கையாள்கின்றனர். அத்தோடு அவரே அனைத்தையும் 'ஆண்டு நடத்துபவர்' எனும் பொருள்படும் சொல்லையும் இணைத்து 'ஆண்டவராகிய கடவுள்' ('யாவே எலோகிம்') என இரு பெயரிட்டுக் கூறும் வழக்கைப் பயன்படுத்துகின்றனர்.

ஆக, விவிலியத்தில் ஆதிக் குடும்பத்தைப் பற்றி விவரிக்கப்பட்டுள்ள இரு வரைவுகளுமே ஒரே இறைவனால் தான் ஆதித் திருமணம் செய்து வைக்கப்பட்டது என்பதைக் கற்பிக்கின்றன. என்பது தெளிவு, இந்த முன்னுரையின் பின்புலத்தில் இப்போது யாவே மரபினரின் வரைவிலே காணக் கிடைக்கும் சில நுணுக்கங்களைப் பார்த்து மகிழ்வோம். படைப்பு பற்றி குருகுல மரபு வரையும் போது 'விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையும்..... என்று தொடங்குகிறார் (தொநூ 1:1). முடிக்கும் போது 'விண்ணுலகும் மண்ணுலகும் தோன்றிய முறை இவையே' (தொநூ 2:4அ) ஆனால் இப்போது நாம் ஆய்ந்து பார்த்துக் கொண்டிருக்கிற யாவே மரபாசிரியர் தம் வரைவைத் தொடங்கும் போது ஷஷமண்ணுலகையும் விண்ணுலகையும்..... (தொநூ 2:4ஆ) என்று கூறி மண்ணுலகப் படைப்பு பற்றிய சில விளக்கங்களைத் தருகிறாரே ஒழிய விண்ணுலகப் படைப்பைப் பற்றி எதையும் குறிப்பிடவில்லை. அதாவது இந்த ஆசிரியரின் பார்வையே மண்ணுலக மையம் கொண்டதாய் தென்படுகிறது. இந்த மண்ணிலிருந்து தான் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் தமது உயிர் மூச்சை ஊதி அவனுக்கு உயிர் கொடுக்கிறார் (தொநூ 2:7) என்று அறிவிக்கிறார். அதாவது, களிமண்ணை கையாண்டு பற்பல உருவங்களைக் குயவன் கொடுக்கின்ற போது மிகுந்த அக்கறையோடு அந்த மண்ணைக் கையாள வேண்டும்.

தொடரும்.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமான் யோசேப்பு

ஆதியில் ஆண்டவர் வாக்கு ~ அது
நிறைவேறும் காலமும் வந்தது
தெரிந்தெடுத்தார் இறைவன் இருவரை
யோசேப்புமரியா,
நாமம் கொண்ட இருவரும்,
இறைவனின் தெரிவானர்கள்.
இறைமகனின் பிறப்பில்
பெரும் பங்கேற்றார்கள்
அன்னைமரியாவை
கூறிட வார்த்தைகள் போதாது ~ அதுபோல்
இறைவனின் தெரிவு ஒரு போதும்
தவறிழைக்காது என்பதற்கமைய
இறைமகனின் வளர்ப்புத்
தந்தையானார் யோசேப்பு.
செய்ததோ தச்சுத் தொழில்,
அதில் காட்டினார் நேர்மை
மரியாவின் வயிற்றில்
இறைமகன் வாழ்கிறார் என்பதை
அறிந்தநாள் முதல்
பணிகள் பலசெய்தார்
விலகியும் நின்றார், குடும்ப வாழ்வில்
'இவர் ஒருநீதிமான்' ~ என்ற
வார்த்தையினை திருவிவிலியத்தில் பெற்று
இன்றும் நம் மனங்களில்
நீதிமானாக வலம் வருகிறார்
மனைவியின் மட்டில்
கணவனுக்குரிய அன்பும் பாசமும்
மகனின் மட்டில் தந்தைக்குரிய
கரிசனையும் மட்டுமல்லா
சிறந்த குடும்பத் தலைவனாக
இன்றைய குடும்பங்களில்
எடுத்துக் காட்டாய் விளங்கும்
புனித யோசப்பின்
வாழ்வும் பணியும்
எம் வாழ்க்கைக்கு முன்னுதாரணம்
வாழ்வோம் யோசேப்பின் வழிதனிலே
வெல்வோம் அவர் காட்டிய பாதையிலே



**(இயேசுவின் நாமத்தில்)**
**திருமதி. ஜோ. அனஸ்ரி அமலராணி**

# உறவுகளை மறவாதே

கருவினிலே உன்னை சுமந்து ~ தான்
கண்மூடி மண்ணுக்குள் போகும் வரை
கண்ணின் கரு விழிபோல் உன்னைக் காத்தவனை மறவாதே
மார்பினிலே உனை சுமந்து ~ தான்
மரணப்படுக்கைக்கு போகும் வரை
மாடாக உழைத்து ஓடாக தேய்ந்த உன் தந்தையை மறவாதே
இரத்த உறவாய் உன்னோடு ~ கூடி
இன்று வரை வட்டமிடும் ~ உன்
இளயவனை(ளை) மூத்தவனை (ளை) நினைவிருக்கும் வரை
அம்மை அப்பனின் வழி வந்த உறவுகளையும்
அரிசுவடு சொல்லித்தந்த ஆசானின் உறவினையும்
அக்கம் பக்கம் இருக்கும் அயலானின் உறவுகளையும் மறவாதே
உற்ற நண்பன் நண்பியினை மறவாதே
உப்பிட்ட உதவி செய்த உலகத்து உறவுகளை மறவாதே
உறவுகள் ஏதுமின்றி ஒண்டியாய் நிற்பவனை உறவாட மறவாதே
உள்ளத்துள் இல்லத்துள் இணைந்தவளை மறவாதே
உற்ற துணைவனாம் உன் கணவனை மறவாதே
உன் வழித்தோன்றலான வாரிசு, வாரிசின் வாரிசுகளையும்
மறவாதே மாற்றுத் திறனாளிகள் அனைவரும் உன் சோதரனே
மறவாதே மன்றாட்டு கேட்பவர்களையும் மன்றாட்டாய்
(மன்றாடி) கேட்பவர்களை மறவாதே
பங்கின் தந்தையரையும் குருக்களையும் மறவாதே பணிசெய்யும்
கன்னியர்களையும் துறவிகளையும் மறவாதே
பரமனாம் எம்பிரான் இயேசு ஆண்டவரை அவர் உறவை
மறவாதே உறவுகள் தொடரட்டும், உறுதியான முடிவெடுத்து
உறவுகளை மறவாதே

**மதுரநாயகி ரொ. கெனடி**
**தூய மரியாள் பேராலயம்**

# மறைமாவட்ட பீடப்பணியாளர்களுக்கான தவக்காலத் தியானம்.

மறைமாவட்ட பீடப்பணியாளர்களுக்கான தவக்கால தியானமானது கடந்த 04.03.2017 சனிக் கிழமையன்று மறைமாவட்ட பீடப்பணியாளர்கள் ஒன்றிய இயக்குனர் அருட்தந்தை றொஹான் பேர்ணாட் அடிகளாரின் தலைமையில் புனித குவாடலூப்பே அன்னை திருத்தலத்தில் இடம்பெற்றது. காலை 09:00 மணிக்கு ஆரம்பமான தியானத்தில் அருட்தந்தை ஜொணத்தன் அடிகளார் புனித ஜோசப் வாஸ் அடிகளாரின் அழைத்தலும், பணிவாழ்வும் இன்றைய பீடப்பணியாளர்களும் எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார், உரையைத் தொடர்ந்து பீடப்பணியாளர்களுக்கான ஒப்புரவு அருட்சாதனமும் வழங்கப்பட்டது. அத்தோடு மறைமாவட்ட ஆயர் அவர்களினால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இறுதியாக மதிய போசனத்துடன் பீடப்பணியாளர்களுக்கான தவக்கால தியானமானது நிறைவடைந்தது.

**தகவல் இ. ஜொனத்தன்**

**புகைபடங்கள் 12ம் பக்கத்தில்...**

| பங்கு | பங்குபற்றியோர் விபரம் |
|---|---|
| சீனக்குடா | 11 |
| பேராலயம் | 12 |
| பள்ளத்தோட்டம் | 12 |
| குவாடலூப்பே | 07 |
| ஆண்டாங்குளம் | 11 |
| செல்வநாயகபுரம் | 05 |
| சிலுவைமலை | 09 |
| உவர்மலை | 06 |
| இறை இரக்கம் | 14 |
| அன்புவெளிபுரம் | 05 |
| பாலையூற்று | 09 |
| நிலாவெளி | 13 |
| இருதயபுரம் | 04 |
| குச்சவெளி | 05 |
| சாம்பல்தீவு | 12 |
| இலிங்கநகர் | 06 |
| மூதூர் | 14 |

# தவக்காலம் ~ மனமாற்றத்தின் காலம்

விபூதி புதனுடன் தவக்காலத்தை ஆரம்பித்திருக்கின்றோம் இந்த நாற்பது நாட்களும் இயேசுவின் பாடுகளையும், மரணத்தையும் பற்றி அதிகமாக சிந்திப்போம். இத் தவக்காலத்தை இரக்கத்தின் காலம், அருளின் காலம், மன்னிப்பின் காலம், மனமாற்றத்தின் காலம் என்று அழைக்கிறோம். இக்காலம் எம் ஆன்மீக எதிரிகலான சாத்தான், உலகம், மற்றும் உடல் இச்சைகள் போன்றவற்றை அடக்கி வெற்றி கொள்வதுடன் மனமாற்றம் இல்லை எனில் மீட்பு இல்லை.

தவம் என்றால் ஒரு சந்தி, சுத்தபோசனம் போன்ற உடல் ஒறுத்தல் முயற்சிகளில் ஈடுபடும் போது, பிறரன்புச் செயல்களை செய்வதும், சிலுவைப்பாதை போன்ற செப முயற்சிகளை மேற்கொள்வதும், தான் என்ற மரபு திருச்சபையில் காலம் காலமாக வழங்கி வருகிறது. இவை அனைத்தும் தவச் செயல்களே. ஆனால் சற்று ஆழ்வாக சிந்தித்துப் பார்க்கும் போது தவத்தின் உட்பெருளை நாம் ஒரு சில வெளியரங்க தவமுயற்சியில் அடக்கிவிட முடியாது. அடிப்படையான ஒரு மனமாற்றத்திற்கும், வாழ்க்கையில் ஒரு நல்ல திருப்பத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கும், இறைவனை நோக்கி நமது இதயங்களை திருப்பிக்கொள்ளத் தயாராக இருக்கின்றோம் என்ற ஒருமன உறுதிதான் உண்மையான தவம்.

சிக்கனத்துடன் கூடிய தாராளமும், அப்படியே சிக்கனம் சிக்கனம் அல்லாத தாராளமும் வெறும் ஊதாரித்தனமே, தேவையான இடத்தில் செலவிடுவதும், தேவையற்றவற்றைப் புறக்கணிப்பதும் செல்வத்தின் அடிப்படை. சில்லறையை நீ பார்த்துக்கொள், ரூபாவை அது தானே பார்த்துக் கொள்ளும் என்பது பழமொழி. இந்த இரக்கம் சிக்கனம் முன்னிலைப் படுத்தாமை நாமும் இத்தவ நாட்களில் பின்பற்றி வாழ அழைக்கப்படுகின்றோம். மத்தேயு நற்செய்தி 6ம் அதிகாரத்தில் இந்த மூன்று கருத்துக்களை உள்ளடக்கியதாக காண்கிறோம்.

இரக்கமுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர் (மத்5:7) என்ற இறைமகன் இயேசுவின் வார்த்தைகளை எண்ணிப் பார்போம். இரக்கத்தின் அடிப்படை அன்பு. எங்கே அன்பு பெருகி வருகிறதோ அங்கே இரக்கம் தான~ ாகவே வந்து சேரும் இந்த இரக்கம் ஒருவனைத் தர்மம் செய்ய அழைத்துச்செல்லும்.

சிக்கனம் என்பது நோன்பு இருத்தலைக் குறிப்பதாக எடுத்துக் கொள்வோம். நம்மில் பலர் நோம்பு இருத்தலைப் பற்றிய தவறான கருத்துடையவர்களாக வாழ்கின்றோம். பொதுவாக நோன்பு என்றால் நமக்கு நினைவுக்கு வருவது ஒருவேளை உணவு இல்லாமல் இருப்பது, இறைச்சி, மீன் முட்டை என்பவற்றை உண்ணாமல் இருப்பது. என நினைக்கிறோம், ஆனால் இயேசு கூறும் உண்மையான நோன்பு இதுவல்ல. நீ நோன்பு இருப்பது பிறருக்குத் தெரியக் கூடாது தலையில் எண்ணெய் தோய்த்து முகத்தைக் கழுவி சுத்தமாயிரு (மத் 6:17) நீ நோன்பின் மூலம் சிக்கனப்படுத்திய உன் பொருளாக இருந்தாலும் சரி, பணமாக இருந்தாலும் சரி இது பிறருக்குப் பயன்படுத்த வேண்டும், உதவி செய்ய வேண்டும் என்பதாகும், ஆகவே நோன்பின் மூலம் நீ சிக்கனப்படுத்திய உனக்கு அல்ல, பிறருக்கு [illegible]

அடுத்ததாக இறைவேண்டல் என்பது தன்னை முன்னிலைப் படுத்தாமை. இதைத்தான் இயேசு இறைவேண்டல் என்கிறார். யார் ஒருவர் தங்களை முன்னிலைப் படுத்த நினைக்கிறார்களோ,யார் மக்கள் பார்க்க வேண்டுமென தங்களின் அறச்செயல்களை செய்கிறார்களோ அவர்கள் இறைவனைத் தங்கள் வாழ்வில் இருந்து அகற்றிவிட்டு தங்களை கடவுள்நிலைக்கு உயர்த்த நினைக்கின்றார்கள். ஆயினும் இறைவேண்டலில் நிலைத்திருப்பவர்கள் தங்களை முன்னிலைப் படுத்தாமல் இறைவனை முன்வைப்பார்கள், இறைவனின் ஆசீருடன், துணையுடனும் தான் நாங்கள் யாவற்றையும் செய்கின்றோம். பவுலடிகளார் கூட ' கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ள எல்லாவற்றையும் குப்பையாகக் கருதுகின்றேன்' (பிலி3:8) என்றும் 'எனக்கு வலுவூட்டுகின்றவரின் துணை கொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு' (பிலி4:13) என்றும்சொல்கிறார்.

இந்த தவக்காலத்தில் நான், எனது என்ற சிந்தனைகளை அகற்றி விட்டு இறைவனை மையப் படுத்திய மனிதரோடு உண்மையான உறவு கொண்டு வாழ்வோம்.

இத்தவக்காலத்தில் முதலில் இறைவனைத் தேடுவோம். 'என்னைத் தேடுங்கள், நீங்கள் வாழ்வீர்கள்' (ஆமோஸ் 5:4) ஆண்டவரையும் அவரது ஆற்றலையும் தேடுங்கள், அவரது திரு முகத்தை இறையராது நாடுங்கள் (தி.பா.105:4)

நம்மை முன்னிலைப்படுத்தாது பிறர் நலனில் அக்கறை கொண்டவர்களாக, இரக்கத்தோடு நடந்து, நேர்மையைக் கடைப்பிடித்து தாழ்ச்சியோடு நடந்து கொள்வோம்.

நேர்மையை கடைப்பிடித்தலையும், இரக்கம் கொள்வதில் நாட்டத்தையும், உன் கடவுள் முன்பாக தாழ்ச்சியோடு நடந்து கொள்வதையும் தவிர வேறு எதை ஆண்டவர் உன்னிடம் கேட்கின்றார் (மீக்கா6:8)

எனவே இத் தவக்காலத்தில் நாம் பாவ வாழ்வில் இருந்து விடுபட, கல்மனம் கரைய, குறை கூறுகின்ற மனம் விலக, பழி தீர்க்கும் மனம் போக, இறைவனிடம் 'கடவுளே தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும் உறுதிதரும் ஆவியை, புதுப்பிக்கும் ஆவியை என்னுள்ளே உருவாக்கியருளும்' (திபா 51:10) என்று செபிப்போம். நிச்சயமாக நம் இறைவன் நமது செபத்தைக் கேட்டு நமக்கு புதிய இதயத்தை அருள்வார். புதிய ஆவியைத் தருவார். கல்லான இதயத்தை எடுத்துவிட்டு சதையாலான இதயத்தை தருவார். (எசே36:26)

சிலுவையை உற்றுப்பார்த்த நூற்றுவத் தலைவர் அவர் உயிர்த்துறந்ததைக் கண்டு 'இம் மனிதர் உண்மையாகவே இறைமகன்' என்றார் மாற்கு15:39)நாமும் இத் தவக்காலத்தில் சிலுவையை உற்றுப்பார்ப்போம். இறை இயேசுவின் மீது முழு விசுவாசம் கொள்வோம். நமது வாழ்வில் சந்திக்கும் துன்ப துயரங்களை கண்டு துவண்டு விடவேண்டாம். ஏனெனில் நமது இறைவன் நம் வலுவின்மையைக் கண்டு இரக்கம் காட்டாதவர் அல்ல. (எபி 4:15) மாறாக நாம் இரக்கத்தை பெறவும், ஏற்ற வேளையில் உதவக்கூடிய அருளைக் கண்டடையவும் (எபி 4:16) தமக்கு கீழ்படிவோர் அனைவரும் என்றென்றும் மீட்பைப் பெறக் காரணமானார் (எபி 5:9) எனவே இந்தக் காலத்தில் சிலுவை நமக்குத் தரும் எல்லாப் படங்களையும் ஏற்றுக் கடைப்பிடிக்க முயற்சிப்போம். அப்படி இல்லை என்றால் குறைந்தபட்சம் ஒருசில பண்புகளையாவது நமதாக்கி கெள்வோம். சிலுவை பற்றிய செய்தி ஆழ்ந்து போகிறவர்களுக்கு மடமையே. ஆனால் மீட்பு பெறும் நமக்கோ அது கடவுளின் வல்லமை (1கொரி18)

**ஆக்கம்: கலாபூஷணம் புலவர் அரியநாயகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி– 22
## உரோமையர் திருமுகம் அதி 10–14வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கா | | மு | ழ | ங் | கா | ல் | | வா |
| ன் | ட் | | டு | தோ | த் | ய | ஐ | டு | யா |
| வே | பொ | தா | | | ம் | | | யோ | ர |
| டு | லி | ழ் | ள் | வா | வ | டு | து | சி | அ |
| ட் | வ | நி | க | ழ் | ல் | போ | ம | ச் | றி |
| ஹ | ம | லை | ர் | ந் | செ | ப் | சை | ர் | க் |
| ச | ர | யி | ட | தா | ள் | தி | ட் | ல | கை |
| ச் | க் | ல் | ண் | லு | ரு | ம | ரா | ம | யி |
| ரி | கி | | தொ | ம் | அ | | தி | க | ட் |
| எ | ளை | பா | த | ங் | க | ள் | | மு | டு |

1. வாயார அறிக்கையிட்டு
2. பாதங்கள்
3. எரிச்சலூட்டுவேன்
4. காட்டொலிவ மரக்கிளை
5. அருள்செல்வம்
6. முகமலர்ச்சியோடு
7. தாழ்நிலையில்
8. தொண்டர்கள்
9. வாழ்ந்தாலும்
10. முழங்கால்
11. திராட்சைமது
12. ஐயத்தோடு
13. மதிப்போடு

**பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும்.**

பரிசுக்குரியவர்கள்:-

**1ம் பரிசு 500/=**
**N.K.** பிறைற்றன்
இல.25/4,
பள்ளத்தோட்டம்,

**2ம் பரிசு 300/=**
ர. மேரிகில்டா
இல.23, பிரதான வீதி,
கன்னியா

**3ம் பரிசு 200/=**
இ. நிவக்சிக்கா
இல,18/4, அன்னை
வேளாங்கண்ணி வீதி,
திருகோணமலை.

பங்குபற்றியோர் ~ 56 பேர்
சரியானவிடையளித்தோர் ~ 47 பேர்

### பாராட்டுக்குரியவர்கள்

**பேராலயம்**
ஜெ. ஸ்டபி
செபீரா யோன்சன்
இ. ஜெயசூரன்
ம.தர்ஷிகா
தே. ஜெரோமினா
சரோனா R.F
இ. ஜோனத்தன்
திருமதி. வி.காமலிற்றா
டானியலா R.F
ஆன்வஜீரா R.F
**J.** பெவன்

**உவர்மலை**
டே.மெருசியன்பிள்ளை
ச.டே. வேறன்பிள்ளை.
அ. டிரோன்
டெ. இவேஞ்சலின்

**மூதூர்**
சு. சனலிபெர்னாண்டோ

**தூய ஜோசப்வாஸ் குருமடம்**
**D.** சுஜீவன்

**பாலையூற்று.**
ர. டானிடிலோஜன்
சு. கௌசல்யா
குணசேகரன் டிலூஷன்
ஜொ. நிலக்ஷன் பாத்திலட்
**G.** கிஷோன்
ச. ஏஞ்சல்

**செல்வநாயகப்புரம்**
ர. விதுர்ஷன்
**R.** எமில்ராஜ்

**இலிங்கநகர்**
ர. சாறிக்கா
லென்சிகா மோத்வானி
கிறிஸ்டி ஜெனிக்ஷயா
ரெ.மேரி றொஷானி

**குவாடலூப்பே**
T. யூலிசெஸ்
பி. பிரவீனா

**அலஸ்தோட்டம்**
அ. றொவினா

**கன்னியா**
சேபானா
நி. மரியாள்
சே.டெய்சிஅனெற்

**நிலாவெளி**
**E.** டேமியன்
**A.** விமலதாஸ்
**R.** அப்சரா நிவேதி
**A.** அனஸ்ட் டேமியன்
ச. அனோஜா
தே. சமில்டன்

**சாம்பல்தீவு**
தே. ஜெரோம்
ரெபேக்கா ஜெயசீலி
**J.** டானி

## மறைக்கல்வி கற்போம் ~24

01. தூய யோசப்வாஸ் எங்கு திருமுழுக்குப் பெற்றார்?
**பெனாலியும் ஊரில் உள்ள திருமுழுக்கு யோவான் ஆலயத்தில்**

02. தூய யோசப்வாசுக்கு திருமுழுக்கு கொடுத்த குரு யார்?
**இயேசு சபை குரு முதல்வர் யசிந்தோ பெறேரா என்பவர்**

03. தூய யோசப்வாஸ் அடிகளாரின் ஞானப்பெற்றோர் யார்?
**தந்தை வழியில் செபஸ்ரியன் வாஸ்**
**தாய் வழியில் கோப் டொ மிரண்டா**

04. தூய யோசவாசின் பணிவாழ்வின் வெற்றிக்கு அடித்தளமாக இருந்தவை எவை? **இறையன்பு , பிறர் அன்பு, சுயநலமற்ற தியாகம், பணிபுரியும் ஆர்வம்**

05. இரண்டு வயதும் அதற்குட்பட்டவையுமான எல்லாக் குழந்தைகளையும் கொல்ல ஆள்களை அனுப்பிய அரசன் யார்? **ஏரோது**

06. குழந்தை இயேசுவும், தாயும், சூசையும் மீண்டும் எப்போது இஸ்ரயேல் நாட்டுக்கு திரும்பி வந்தார்கள்? **ஏரோது அரசன் இறந்த பின்**

07. தூய யோசப்வாஸ் தனது ஆரம்பக் கல்வியை எங்கு கற்றார்?
**சன்கோலே எனும் இடத்தில்**

08. 'மனம்மாறுங்கள் ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது'என பறைசாற்றியவர் யார்? **திருமுழுக்கு யோவான்**

09. 'பாலைநிலத்தில் குரல் ஒன்று முழங்குகிறது, ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள் அவருக்காகப் பாதையைச் செம்மையாக்குங்கள்' என எந்த இறைவாக்கினர் கூறினார் என்று திருமுழுக்கு யோவான் கூறுகிறார்? **எசாயா இறைவாக்கினர்**

10. திருமுழுக்கு யோவான் எதனை ஆடையாக அணிந்திருந்தார்? அவர் உணவாக எதை உட்கொண்டார்? **ஒட்டக முடியாலான ஆடையை அணிந்திருந்தார்**

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி– 23
## 1 கொரிந்தியர் அதி 01 – 04 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கி | | | | | | | | | |
| | மா | | | சி | | மீ | | | |
| ம | | வ | | | | | ம | | |
| | | | | | | | | | ம |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | அ | | | | | | |
| | | | | | அ | | | | |
| | | தி | | | | | | | |
| | | | இ | | | | | அ | |

**01. மனி.... ஞா....த்....ன்**
**02. மீ....வெ....ம்**
**03. திட உ....வை**
**04. வலி.....ர்**
**05. மர.... தண்ட.......**
**06. அறிவு..... கூறு....றே.....**
**07. மாண்....ள்ளவ....கள்**
**08. மனமே.....ன்றி**
**09. இறு.....வ.....**
**10. அடித்த.....ம்**
**11. சிலு.....யில்**
**12. அப்......ல்லோ**
**13. கிறிஸ்....வி... ஊ...யர்**

பெயர்:.......................................................
முகவரி:.....................................................
பங்கு:........................................................

முடிவுத் திகதி 25.05.2017

### ஹாய் குட்டிஸ்
### திருவிவிலிய புதிர்போட்டி எண் ~ 30
### 2அரசர்கள் 01 ~ 12அதி வரை

01. பலகணி வழியாய்க் கீழே விழுந்து காயமுற்றவர் யார்?
விடை:.......................................................

02. இஸ்ரேயேலின் அரசன் யோராம் சமாரியாவில் எத்தனை ஆண்டுகள் ஆட்சி செலுத்தினான்?
விடை:.......................................................

03."வழுக்கைத்தலையாபோ, வழுக்கைத் தலையாபோ" என்று யார் யாரை ஏளனம் செய்தார்?
விடை:.......................................................

04. பாகாலுக்கு ஆகாபு எவ்வளவு ஊழியமே செய்தான்?
விடை:.......................................................

05. ஒருநாள் எலிசா எங்கு சென்றார்?
விடை:.......................................................

06. நாமான் வலிமை மிக்க வீரர் ஆனால்
.......................................................

07. சமாரியாவில் என்ன ஏற்பட்டது?
விடை:.......................................................

08. தேரைப் பூட்டுங்கள் என யார் கூறியது?
விடை:.......................................................

09. நகர வாயிலின் அருகே தொழு நோயாளிகள் எத்தனை பேர் இருந்தனர்?
விடை:.......................................................

10. ஏழு வயதில் அரசனானவர் யார்?
விடை:.......................................................

11. சிரியாய் படையினர் யாரை தாக்கினர்?
விடை:.......................................................

12. ஆண்டவரின் இல்லத்தில் சேர்ந்த பணத்தை எண்ணிப் பைகளில் கட்டி வைத்தவர்கள் யார்?
விடை:.......................................................

பெயர்:.......................................................
முகவரி:.....................................................
பங்கு:........................................................

**முடிவுத் திகதி 25-05-2017**

### ஹாய் குட்டிஸ்
### திருவிவிலிய புதிர்போட்டி எண் ~ 29
### 1அரசர்கள் 12 ~ 22 அதி வரை
### விடைகள்

| | | |
|---|---|---|
| 01. | காகங்களுக்கு | (17:04) |
| 02. | யோசபாத்து | (15:24) |
| 03. | ஆண்டவர் -யாக்கோப்புக்கு | (18:31) |
| 04. | 41 (நாற்பத்தொன்று) | (14.21) |
| 05. | பெத்தேல், தாண் | (12:29) |
| 06. | சாப்பிடு | (19:07) |
| 07. | உண்மையை | (22:16) |
| 08. | 232 | (20:15) |
| 09. | வானத்துப் | (14:11,16:04) |
| 10. | எரொபவாவின் மனைவி | (14:06) |
| 11. | எலியாவின் | (18:37) |
| 12. | ஆகாபு | (21:04) |

பங்குபற்றியோர் ~ 41 பேர்
சரியானவிடையளித்தோர் ~ 22 பேர்

**பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும்.**

பரிசுக்குரியவர்கள்:-

**1ம் பரிசு 500/=**
ரெபேக்கா,
சாம்பல்தீவு.



**2ம் பரிசு 300/=**
ஆர்.சனலி பெர்ணான்டோ
ஆலய வீதி, மூதூர்.

**3ம் பரிசு 200/=**
தனராஜா மிஷேல்
இல: 427, அன்புவழிபுரம்
திருகோணமலை.

### பாராட்டுக்குரியவர்கள்

**பேராலயம்**
றொ.கெ.யூட்லின்

**குவாடலூப்பே**
பி. பிரவீனா

**செல்வநாயகப்புரம்**
றொ.கெ.யூட்லின்

**அன்புவழிப்புரம்**
கொ. நிலக்ஷன் பாத்திலட்
கொ. ஹர்த்துமேரி

**பாலையூற்று**
சு. சுவேக்கா
ஜி. குணசேகரன்
சு. கௌசல்யா
இ. சுகிர்தா

**உவர்மலை**
டி. இவாஞ்ஷலின்

**இலிங்கநகர்**
கிறிஸ்ரீ.ஜெனிகஷயா
ரவிச்சந்திரன் அக்ஷே
ரெ. மேரிரொஷானி
லென்ஷிகா மோத்வாணி

**நிலாவெளி**
தே. சமில்டன்

**சிறியகுருமடம்**
ஜே. பெவன்
டி. சுஜிவன்
ஜே. டானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய லூர்து அன்னை திருத்தலத்தில் யாத்திரை மண்டபம்







# கா.பொ.த உயர்தரத்தில் சித்தி



உவர்மலை குழந்தை இயேசு ஆலயப் பங்கையும், தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரியையும் சேர்ந்த மாணவன் செல்வன் சாந்தகுமார் ஜோன் கில்பட் கடந்த வருடம் நடைபெற்ற கா.பொ.த உயர்தர பரீட்சையின் வர்த்தக பிரிவில் 2A,B பெறுபேற்றை பெற்று பாடசாலை மட்டத்தில் 11ம் இடத்தையும், மாவட்ட மட்டத்தில் 9ம் இடத்தையும் பெற்று பங்கிற்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார். இந்த சகோதரனின் கல்விமென்மேலும் உயர இறைவன் துணையுடன் திருமலைத்தீபம் தன் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றது.

# நன்றி நவில்தலும் 31ம் நாள் நினைவும்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 1937 | | 2017 |
| 11 | | 03 |
| 24 | | 03 |



## அமரர் வீரப்பன் செல்லத்துரை ஜோசப்

எமது தந்தை, சுகயீனமுற்றிருந்தபோது அவரை ஆஸ்பத்திரியிலும் இல்லத்திலும் வந்து சந்தித்து எங்களுக்கு ஆறுதல் அளித்து உதவி புரிந்தமைக்கும் அவர் காலம் சென்ற போது அனுதாபச் செய்திகளை அனுப்பியும் செபங்களால் எங்களைத் தேற்றி, இரங்கல் திருப்பலியில் கலந்துகொண்டு எமது தந்தையின் நல்லடக்கத்தில் பங்குபற்றிய திருமலை மறைமாவட்ட மேதகு ஆயர் நோயல் இம்மானுவல், குருமுதல்வர். அருட்பணி. T. கிங்ஸ்லிறொபட், திருமலை மறைமாவட்ட அருட்பணியாளர்கள், செபமாலை தாசர் சபையின் உயர் தலைவர் அருட்பணி K.P. சேவியர், மாகாண தலைவர் அருட்பணி பிரான்சிஸ் ஜெயம், மற்றும் அருட்பணியாளர்கள், ஏனைய துறவற சபையைச் சார்ந்த அருட்பணியார்கள், அருட்சகோதரிகள் விசேசவிதமாக அப்போஸ்தலிக்க சபை அருட்சகோதரிகள், உற்றார், உறவினர்கள், அன்பான அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.


எமது தந்தையின் ஆன்ம இளைபாற்றிக்காக 31ம் நாள் நினைவில் 04.04.2017 அன்று அலஸ்தோட்டம் இறை இரக்கத் திருத்தலத்தில் மதிய வேளையில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு எமது இல்லத்தில் நடைபெற்ற அன்னதானத்திலும் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை கூறிக்கொள்கிறோம்.

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**உறவினர்கள், நண்பர்கள்**
**61, நித்தியபுரி, 1ம் ஒழுங்கை, உப்புவெளி, திருகோணமலை.**

# தூய லூர்து அன்னை திருத்தலத்தில் இலவச கணனி வகுப்பு



# மறைமாவட்ட பீடப்பணியாளர்களுக்கான தவக்காலத் தியானம்.





# ஆழ்ந்த அனுதாபங்கள்

விபத்தின் போது அகால மரணமடைந்த அருட்பணி. யூட் ஜோன்சன் அவர்களின் சகோதரியும் அவரது கணவர், மகள் ஆகியோரின் பிரிவால் துயருறுவோருக்கும்,

எமது நிலையத்தின் பணியாளர் திருமதி. நி. சுதார்ஷினி மேரி அவர்களின் சகோதரனின் திடீர் மரணத்தினால் துயருறும் அனைவருக்காவும்,

எமது திருமலைத் தீபம் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றது.

இவர்களின் ஆன்மா இறைவனில் இளைப்பாறட்டும்.

இயக்குனர்
பணியாளர்கள்

## 104வது வருடாந்த திருவிழா - புனித சூசையப்பர் ஆலயம் - நிலாவெளி



கொடியேற்றம்: 28.04.2017 (வெள்ளிக்கிழமை)
தலைமை: குரு முதல்வர் அருட்பணி.T.கிங்சிலி றொபட்
நேரம் மாலை 05.00

மாலை வழிபாடு: 06.05.2017 (சனிக்கிழமை)
தலைமை அருட்பணி க.நித்திதாசன்
நேரம்: மாலை 06.00



திருவிழா கூட்டுத் திருப்பலி: 07.05.2017 (ஞாயிற்றுக்கிழமை)
தலைமை அதி. வண. கலா. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை
நேரம் : காலை 7:30

தொடர்புகளுக்கு:
தொலைபேசி இல: 026 22 32232 ; 077-3716292
மின்னஞ்சல் : dfreddie24@gmail.com

பங்குத்தந்தை, பங்குமக்கள்
புனித சூசையப்பர் ஆலயம்
நிலாவெளி.

# வாழ்வு தரும் மரம்

விவிலியத்தின்முதல் நாலான தொடக்க நால் வாழ்வு தரும் மரம் பற்றி குறிப்பிடுகிறது (தொநா2:9). இந்த மரத்துடன் நன்மை தீமை அறியும் மரத்தை கடவுள் ஏதேன் தோட்டத்தில் நட்டு வைத்ததாக விவிலியம் கூறுகிறது. இவை இரண்டும் இரு வெவ்வேறு மரங்களாக அல்லது ஒரே மரமா என்ற விவாதம் விவிலிய அறிஞர்களிடையே உள்ளது. தொடக்க நூலிற்கு வெளியே ஏனைய நூல்களிலும் வாழ்வு தரும் மரம் பற்றிய 8 குறிப்புக்கள் உள்ளன (நீமொ 3:18, 11:30, 13:12, 15:14, திவெ2:7, 22:2, 14:19). திருமறைசாராத விவிலிய நூல்களிலும் 3 முறை இது பற்றிய குறிப்புகள் உள்ளன(2எஸ் 2:12, 8:52, மக் 18:16). கீழைசபையினர் இந்த வாழ்வு தரும் மரம் இயேசுவின் சிலுவையை முன் குறிப்பது என்பர்.

**ஆண்டவருக்கு நான் புகழ் பாடுவேன் [விப 15 : 1]**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org